Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

ஒளி: 07 கதிர்: 233 | பக்கம்:08 | WEDNESDAY, FEBRUARY 16, 2022

புதன்கிழமை பெப்ரவரி 16, 2022 | நகரப்பதிப்பு | FREE



விழிப்பாக இரு. உன் மனதை நன்றாகக் காத்துக் கொள். சேற்றில் அகப்பட்ட யானை, அதிலிருந்து முயன்று வெளிவருவது போல, துன்பங்களில் இருந்து உன்னை வெளியேற்றிக் கொள்–(தர்ம போதனை)

---

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை

# முற்றாக ஒழிக்க வேண்டும்

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு

2022 ஆம் ஆண்டுக்கான தமது வரைபடத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக ஒழிப்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

பயங்கரவாதத்துக்கான புதிய வரைவிலக்கணத்துடன் பயங்கரவாதக் குற்றமும் தண்டனைச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று தாம் நம்புவதாக, இம்மாத முற்பகுதியில் இடம்பெற்ற இராஜதந்திரிகளுக்கான மாநாட்டின் போது ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

நாட்டின் பொதுச் சட்டத்தின் கீழ் தேவையான திருத்தங்களுடன் பயங்கரவாதத்தை விசாரிக்க வேண்டும் என்று ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

---



ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி ஆகியவற்றில்

# 25 சதவீத மிகைவரி அமலாகாது

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றின் மீதான 25 சதவீத மிகைவரி தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை அமல்படுத்தப்படமாட்டாது என, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதானவர்

# 12 வருடங்களின் பின்னர் விடுதலை

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 12 வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்த நபரை கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதவான் சந்திம லியனகே, நேற்று (15) விடுதலை செய்தார்.



தொடர்ச்சி P2

---



# பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து வேட்டை

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை, கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக, நேற்று (15) முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரையிலும் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

---

# மின்வெட்டு இல்லை

எதிர்வரும் காலங்களில் திட்டமிடப்பட்ட மின்வெட்டு அமல்படுத்தப்படமாட்டாது என, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, நேற்று (15) அறிவித்தார்.

புதிய வழிமுறையின் காரணமாக திட்டமிடப்பட்ட மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது எனவும் ஆணைக்குழுவால் புதிய வழிமுறைகள் வகுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

# பொதுஜன பெரமுனவுடன் பங்காளிகள் இல்லை



அரசாங்கத்தை அமைப்பதற்கு உதவிய பங்காளிக் கட்சிகள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் இல்லை என்பதை அநுராதபுரத்தில் அண்மையில் நடைபெற்ற பேரணி உறுதிப்படுத்தியதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---



சுகாதார தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தம்

# 2 வாரங்களுக்கு இடைநிறுத்தம்

சம்பள முரண்பாடுகளை நீக்குதல், சிறப்புக் கடமை கொடுப்பனவை ரூ.10,000 ஆக அதிகரித்தல் உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து, 18 சுகாதார தொழிற்சங்கங்களால் ஏழாம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிமுதல, ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டத்தை 9 நாள்களின் பின்னர், இன்று (16) காலை 8 மணியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

---



40,000 மெற்றிக் தொன்

# எரிபொருளை இலங்கைக்கு வழங்கியது இந்தியா

இந்தியன் ஒயில் நிறுவனத்தால் (ஐஓசி) கொழும்புக்குக் கொண்டுவரப்பட்ட 40,000 மெற்றிக் தொன் எரிபொருளை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் கொழும்பு துறைமுகத்தில் வைத்து நேற்று (15) கையளித்தார்.

தொடர்ச்சி P2

---

# மைத்திரிக்கு எதிரான மனுவை விசாரிப்பதற்கு அனுமதி



மஹகம சேகர மாவத்தையிலுள்ள (பேஜட் வீதி) முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது பயன்படுத்துகின்ற உத்தியோகபூர்வ இல்லத்தை தொடர்ந்தும் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை வழங்கிய தீர்மானத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை விசாரிப்பதற்கு உயர்நீதிமன்றம், நேற்று (15) அனுமதி வழங்கியது.

தொடர்ச்சி P2

---

# அரசாங்கத்திடமிருந்தே மக்களை பாதுக்காக்க வேண்டியுள்ளது

தற்போதைய அரசாங்கம் தேசிய பாதுகாப்பையும் மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவே ஆட்சிக்கு வந்ததாகவும் ஆனால், அரசாங்கத்திடம் இருந்து மக்களைப் பாதுகாப்பதே இன்று நடந்திருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

ஊடகவியலாளர் மீதான தாக்குதல்

# CCTV விசாரணைக்கு மட்டும் 9 குழுக்கள் நியமனம்

■ மகேஸ்வரி விஜயனந்தன்



சிரேஷ்ட ஊடகவியலாளரான சமுதித சமரவிக்கிரமவின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அருவருப்புடன் கண்டிப்பதாக தெரிவித்த வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும, இது தொடர்பான விசாரணைக்காக பொலிஸ்மா அதிபரால் பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

ஈஸ்டர் ஞாயிறு விவகாரம்

# வத்திக்கானுடன் இணைந்து மூடிய கதவுகளுக்குப் பின்னால் நடவடிக்கை

### இலங்கை அனுபவிக்கும் விளைவுகளுக்கு அரசாங்கமே பொறுப்பு என்கிறார் பேராயர்



> “ கைது செய்வதற்கு நாகரிகமான வழிகள் இருக்கின்றன. அரசியல்வாதிகளை திருப்திப்படுத்துவது எனது கடமையல்ல என்பதை சட்டமா அதிபருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் நினைவுபடுத்த விரும்புகிறேன்

இலங்கை கத்தோலிக்க திருச்சபையானது, வத்திக்கானுடன் இணைந்து ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதற்கான நடவடிக்கையை, மூடிய கதவுகளுக்குப் பின்னால் ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிவித்த கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், இதனால் இலங்கை அனுபவிக்கும் விளைவுகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

# 115,867 தோட்ட குடும்பங்களுக்கு 15 கிலோ கோதுமை மா

அடையாளம் காணப்பட்டுள்ள 115,867 தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மாதாந்தம் 15 கிலோ கிராம் கோதுமை மாவை சலுகை விலையில் வழங்குவதற்காக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன சமர்ப்பித்த



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 25 சதவீத மிகைவரி அமலாகாது

நேற்றுமுன்தினம் (14) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை நிதியமைச்சர் தெளிவுபடுத்தினார்.

ஒருசில தரப்பினரால் அதுதொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் எதிர்ப்புகள் அடிப்படையற்றதெனவும் நிதி அமைச்சர் மேலும் அமைச்சரவைக்கு தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்குரிய 2,000 மில்லியன் ரூபாய்களுக்கு அதிகமாக நிகர இலாபம் ஈட்டும் தனியாட்கள் மற்றும் கம்பனிகளிடமிருந்து 25 சதவீதமான மிகைவரி தொடர்பாக 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் யோசனை சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் கீழ் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் உட்படுத்தப்படாதென நிதி அமைச்சரால் அமைச்சரவைக்குத் தெளிவூட்டப்பட்டது.

# முற்றாக ஒழிக்க வேண்டும்

பயங்கரவாதக் குற்றத்துக்காக சான்றுகள் கட்டளைச் சட்டத்தைப் பயன்படுத்துவதை விலக்க வேண்டிய அவசியமில்லை என்பதை ஆதரிப்பதாகவும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

# 12 வருடங்களின் பின்னர் விடுதலை

யாழ்ப்பாணம், கரவெட்டியை சேர்ந்த 56 வயதான கந்தப்பு ராஜசேகர் என்பவரே விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமையால், அவரை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக இறுதி யுத்த காலத்தில் கொழும்பில் நிதி சேகரித்து வழங்கிய குற்றச்சாட்டில், 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொதுஜன பெரமுனவுடன் பங்காளிகள் இல்லை

நேற்று (15) காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொது ஆணையை சோதிக்கும் வகையில் தேர்தலுக்கு தயாராகுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தப் பேரணியின் போது எதிர்க்கட்சிகளுக்கு சவால் விடுத்ததாக கயந்த எம்.பி குறிப்பிட்டார்.

பிரதமரின் சவாலை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டதாகவும் எந்தவொரு தேர்தலையும் தாமதமின்றி நடத்துமாறும், பொதுமக்கள் தமது கருத்துகளை வெளியிடுவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

அரசியல் அழுத்தத்தை உணர ஆரம்பித்துள்ள தற்போதைய நிர்வாகம், வாக்காளர்களை தவறாக வழிநடத்தும் வகையில் '100,000 திட்டங்கள்' கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

அரசியல் பேரணிகளை ஒழுங்கமைக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கருணாதிலக தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர அறிமுகப்படுத்திய போது எரிபொருள் விலை சூத்திரம் மிகவும் கேலிக்குரியதாக இருந்தது எனவும் மங்கள சமரவீரவுக்கு சபையில் அனுதாபம் தெரிவிக்கும் போது இந்த சூத்திரத்தை கேலி செய்தவர்கள் இப்போது அதைப் பாராட்டுகிறார்கள் என்றார்.

மீண்டும் எரிபொருள் விலை அதிகரித்தால் நாட்டின் அனைத்துத் துறைகளும் பாதிக்கப்படுவதுடன் பொதுமக்களுக்கு மேலும் சுமை ஏற்படும் என்றும் கயந்த எம்.பி சுட்டிக்காட்டினார்.

# மின்வெட்டு இல்லை

இதேவேளை, மின்வெட்டை அமல்படுத்துவது உடனடியானது என நேற்று முற்பகல் எச்சரித்திருந்த அவர், மின்வெட்டுக்கான பொறிமுறை நாளடைவில் அறிவிக்கப்படும் என தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே, நேற்று பிற்பகல் மேற்குறிப்பிட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அனைத்து அத்தியாவசிய சேவைகளுக்கும் நீர் மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும், பிரதான மின் கட்டமைப்பிலிருந்து மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக வணிக சமூகம் தங்கள் மின் பிறப்பாக்கிகளைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டிருந்தார்.

எவ்வாறாயினும், மின்வெட்டு அதிர்வெண்ணைக் குறைப்பதற்காக கடுமையான பாவனை நேரங்களில் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நுகர்வோர்களுக்கு ஆணைக்குழுவின் தலைவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

நுகர்வோரின் நாளாந்த மின்சார பயன்பாட்டைப் பொறுத்து திட்டமிடப்பட்ட மின்வெட்டுகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் என அவர் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, எரிபொருள் பற்றாக்குறை காரணமாக களனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்தில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்திருந்தது.

இலங்கையில் தற்போது நிலவும் டொலர் நெருக்கடி காரணமாக மின் உற்பத்திக்கு தேவையான எரிபொருளை கொள்வனவு செய்ய முடியாத நிலையில் இலங்கை மின்சார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து வேட்டை

சர்வஜன நீதி அமைப்பின் ஊடான அதன் இணைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனின் அழைப்பின் பேரில், அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர்களான ஹக்கீம், மனோ கணேசன், இரா.சாணக்கியன் மற்றும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், மதத்தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டு கையெழுத்துக்களை பதிவு செய்திருந்தனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குவதற்கான கையெழுத்துப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருந்த இந்தப் போராட்டம் கிழக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# 2 வாரங்களுக்கு இடைநிறுத்தம்

தமது வேலைநிறுத்தப் போராட்டத்தை இன்று (16) காலை 8 மணிமுதல் 14 நாள்களுக்கு இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார நிபுணர்கள் மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ், நேற்று (15) தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கும் சுகாதார நிபுணர்கள் மன்றத்தினருக்கும் திங்கட்கிழமை (14) மாலை சில நிமிடங்கள் இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ்விடயத்தை அமைச்சரவையில் பேசுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வேலை நிறுத்தத்தை தற்காலிகமாகக் கைவிடுவது தொடர்பில், நேற்று (15) காலை கூடிய சங்கங்களின் கூட்டத்தின் போதே தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் ரவி குமுதேஷ் குறிப்பிட்டார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவையடுத்து அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் மாத்திரம் பணிப்புறக்கணிப்பில் இருந்து விலக தீர்மானித்திருந்த நிலையில், ஏனைய 17 தொழிற்சங்கங்களும் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தன. 17 தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 65,000 தொழில் வல்லுநர்களின் பங்குபற்றுதலுடன் வேலைநிறுத்தம் இடம்பெற்றிருந்தது.

மருத்துவ ஆய்வாளர்கள், மருந்தாளர்கள், கதிரியக்க வல்லுநர்கள், ஆய்வுகூட நிபுணர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பல பிரிவுகளை சேர்ந்தவர்கள் பணிப் புறக்கணிப்பினை முன்னெடுத்து வந்தனர்.

இதன் காரணமாக வைத்திய சேவைகளைப் பெறுவதற்கு நோயாளிகள் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எரிபொருளை இலங்கைக்கு வழங்கியது இந்தியா

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் இவ்விடயத்தை தமது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து வருகை தந்த 'ஸ்வர்ண புஷ்பா' என்ற எண்ணெய் தாங்கிக் கப்பல் மூலம் எரிபொருள் தொகை கொண்டுவரப்பட்டிருந்தது.

எரிபொருள் கையிருப்பை உடனடியாக இறக்கி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையின் எரிசக்தி பாதுகாப்புக்காக இந்தியா-இலங்கை கூட்டு தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாக பாக்லே குறிப்பிட்டார். இந்தியா - இலங்கையின் உறுதியான பங்காளி மற்றும் உண்மையான நண்பன் என்றும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் ஐஓசி நிறுவனத்தின் 40,000 மெற்றிக் தொன் எரிபொருள் சரக்குகளை உயர் ஸ்தானிகர் கையளித்தார் என்று டுவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மைத்திரிக்கு எதிரான மனுவை விசாரிப்பதற்கு அனுமதி

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோர் மேற்குறிப்பிட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தமனு, நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட, மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மனு குறித்த வாதத்துக்கான தினமாக மார்ச் 29 ஆம் திகதியை நிர்ணயித்த நீதிமன்றம், மனுதொடர்பான தொடர்பான உரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குடியமர்த்தப்பட்டுள்ள இல்லமானது நாட்டின் பெறுமதி வாய்ந்த சொத்து எனவும், அது பெரும் மதிப்புடையது எனவும் மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

1986 ஆம் ஆண்டின் 4 ஆம் எண் ஜனாதிபதி உரிமைச் சட்டத்தால் முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவர்களது விதவைகள் பெறும் நன்மைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

ஜனாதிபதி உரிமைச் சட்டத்தின் விதிமுறைகள் கண்டிப்பாக விளக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை உயர் நீதிமன்றம் முன்பு அங்கிகரித்துள்ளது என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ள அத்தகைய நிதி மதிப்புள்ள பொதுச் சொத்தை, இனிமேல் எந்தவோர் அரச தலைவரும் பயன்படுத்த முடியாதமை தன்னிச்சையானது மற்றும் சட்டவிரோதமானது என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 12(1) (சமத்துவத்திற்கான உரிமை) பிரிவின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனுதாரர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் இலங்கையின் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# CCTV விசாரணைக்கு...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (15) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இந்தச் சம்பவம் இடம்பெற்ற குறுகிய நேரத்திலேயே இது தொடர்பான விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டினார்.

குறித்த சம்பவம் தொடர்பான பாதுகாப்பு கமெரா காணொளிகள் தொடர்பான விசாரணைக்காக மாத்திரம் 60 பேரைக் கொண்ட 9 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றார். தான் தனிப்பட்ட ரீதியில் அவரது வீட்டுக்குச் சென்று இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் உரையாடியதாகவும் பொறுப்புடன் கூடிய அரசாங்கம் என்ற ரீதியில் ஊடக சுதந்திரத்தின் பெறுமதியை தமது அரசாங்கம் நன்கு புரிந்துகொண்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதல் மூலம் அழுக்கான சமூக குழுவொன்றின் துர்நாற்றம் வீசுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று வரை உலகம் முழுவதும் ஊடகங்களுக்கு வரம்பற்ற அதிகாரம் கிடைத்துள்ளது என தெரிவித்த அவர், அரசியல்வாதிகளிடம் இருந்த அதிகாரம் இன்று ஊடகங்களிடம் உள்ளது. அந்த அதிகாரமான வரம்பற்ற பொறுப்பை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது என்றார்.

எனவே இந்த மிலேச்சதனமான தாக்குதலை முன்னெடுத்தவர்கள் யார் என்பது ஊடகங்கள் வாயிலாகவே பகிரங்கப்படுத்த வேண்டும் என்று தெரிவித்த அவர், கருத்து சுதந்திரத்துக்கு ஏதோவொரு வகையில் தாக்குதல் நடத்தப்படுவதை அரசாங்கம் அனுமதிக்காது என்று தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இதனை விடவும் மோசமான தருணங்களில் கைகளில் பேனாவை எடுத்த ஊடகவியலாளர்கள் இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர், அவ்வாறான சுற்றாடலுக்குள் செயற்படாமல் மொழி மற்றும் கருத்துச் சுதந்திரத்தை பாதுகாக்கும் வகையில் ஊடகத்தைப் பயன்படுத்துவதற்கான சுற்றாடலை உருவாக்குவது ஊடகத்துறை அமைச்சர் என்ற வகையில் தனது பொறுப்பு என்றார்.

# 115,867 தோட்டக் குடும்பங்களுக்கு...

யோசனைக்கு அமைச்சவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

நிதி அமைச்சரால் 'பொதுமக்கள் முகங்கொடுப்பதற்கு நேரிட்டுள்ள பொருளாதார சிரமங்களைக் குறைப்பதற்கான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல்' எனும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திர முன்மொழிவுகளுக்கு 2022 ஜனவரி மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

குறித்த முன்மொழிவுகளில் தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு கோதுமை மா நிவாரணம் வழங்குதல் தொடர்பான யோசனை வர்த்தக அமைச்சரின் தலைமையிலான குழு கவனத்தில் கொண்டு பரிந்துரைகளைச் சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்திடமிருந்தே மக்களை பாதுக்காக்க வேண்டியுள்ளது

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு நன்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று (15) இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு அவ்வப்போது புதிய பரிசுகளை வழங்கி வருகிறது.

உரம் வழங்கும் நடைமுறையை இல்லாமலாக்கிய பரிசு, வெடிக்கும் எரிவாயு சிலிண்டர்கள் போன்ற பரிசுகளின் வரிசையில் அடுத்த சில மாதங்களுக்கு மின்வெட்டை ஏற்படுத்துவதே புதிய பரிசாகும் என்று தெரிவித்தார்.

சுபிட்சத்தின் தொலைநோக்கு என்ற பார்வைக்குப் பதிலாக இருளின் தொலைநோக்கு பார்வையையே அரசாங்கம் செயற்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

கருத்து சுதந்திரம், பேச்சு உரிமை, அரசியல் சுதந்திரம் போன்ற அனைத்து உரிமைகளையும் அரசாங்கம் மீறிச் செயற்படுவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், 24 மணி நேரமும் மக்களின் உரிமைகளை மீறும் அரசாங்கமே இன்று ஆட்சியில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இருநூறு மில்லியனுக்கும் மேல் வரி வருவாய் ஈட்டும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு 25 சதவீதம் மிகைக் கட்டண அறவீட்டிற்கு ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் உள்ளிட்ட 11 நிதியங்கள் உள்ளடக்கப்படவில்லை என நிதியமைச்சர் கூற வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளார் என சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டத்தாலேயே நிதியங்களில் கை வைக்கும் முயற்சியில் அரசாங்கம் ஓர் அடி பின்வாங்கியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# வத்திக்கானுடன் இணைந்து மூடிய கதவுகளுக்கு பின்னால் நடவடிக்கை

நேற்று (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை கர்தினால் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை கத்தோலிக்க திருச்சபை, வத்திக்கானுடன் இணைந்து ஒரு நடவடிக்கையை ஏற்பாடு செய்துள்ளது என்றும் ஆனால் அது பற்றி நாங்கள் இப்போது எதையும் வெளியிட மாட்டோம் என்றும் கர்தினால் மல்கம் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதற்கு சர்வதேச உதவியை நாடினால், அதன்மூலம் இலங்கை அனுபவிக்கும் விளைவுகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

சமூக ஆர்வலர் ஷெஹான் சானக்க, திங்கட்கிழமை (14) கைது செய்யப்பட்டதை சுட்டிக்காட்டிய பேராயர், இதுகடத்தல் என்று குற்றம் சாட்டினார்.

வீதியில் செல்லும் போது ஒரு வெள்ளை வானில் ஷெஹான் அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் அவர் தற்போது எங்கே இருக்கிறார் என்பது யாருக்கும் தெரியாது எனவும் குறிப்பிட்டார்.

மக்களைக் கைது செய்வதற்கு நாகரிகமான வழிகள் இருக்கின்றன எனவும் அரசியல்வாதிகளை திருப்திப்படுத்துவது தமது கடமையல்ல என்பதை சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன் எனவும் தெரிவித்தார்.

அதிபரை முழந்தாளிட வைத்த சம்பவம்:

# வழக்கில் இருந்தே சாமர எம்.பி விடுதலை

■ பாலித ஆரியங்கஷ

அதிபர் ஒருவரை முழந்தாளிட வைத்ததாகக் கூறி, பதுளை பொலிஸாரால் ஊவா மாகாண முன்னாள் ஆளுநரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சாமர சம்பத்துக்கு எதிராகத் தொடரப்பட்டிருந்த வழக்கில் இருந்து, அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணை பதுளை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (15) விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது. மத்தியஸ்த சபையில் ஏற்பட்ட



இணக்கப்பாடு காரணமாக, இந்த வழக்கு விசாரணையில் இருந்து சாமர சம்பத் விடுவிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை நீதவான் சமிந்த கருணாதாஸ விடுத்தார்.

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஆர். பவானியால் பதுளை பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இதேவேளை, இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சாமர சம்பத், “மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கங்கள் சில, எனது அரசியல் வாழ்க்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கில், பவானி அதிபரைப் பயன்படுத்தி பொய்யைப் பரப்பின” என்றார்.

“இச்சம்பவம் சமூக வலைத்தளங்களிலும் அதிகமாகப் பேசப்பட்டிருந்தன. எனினும் உண்மை வெற்றிபெறும் வரையில் நான் அமைதியாக இருந்தேன். பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தில் முஸ்லிம் மாணவிகளை சேர்த்துகொள்ளப்படாமை தொடர்பில் நான் அதிபரை அழைத்து ஆராய்ந்தேன்” என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த அதிபர் தொடர்பில் தான் கவலைப்படுவதாகவும், சந்தர்ப்பவாதிகள் இவரைப் பயன்படுத்தி கொண்டதாகவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

## மஹாபொல சட்டமானது



மஹாபொல உயர்க் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று முன்தினம் (14) தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

இம்மாதம் 08ஆம் திகதி இச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதனூடாக 1981ஆம் ஆண்டு 66ஆம் இலக்க மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டமானது லலித் அத்துலத்முதலி மஹாபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் எனப் பெயர் மாற்றம் செய்வது உள்ளிட்ட திருத்தங்களும் உள்ளடங்குகின்றன.

இதற்கமைய 2022ஆம் ஆண்டு 01ஆம் இலக்க மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு (திருத்தச்) சட்டம் நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வருகிறது. 2022ஆம் வருடத்தின் முதலாவது சட்டத்தை சபாநாயகர் சான்றுரைப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.



சமுதிதவின் வீட்டின் மீது தாக்குதல்

## 21 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளன

ஊடகவியலாளர் சமுதித சமரவிக்கிரமவின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பிலியந்தலையில் உள்ள ஊடகவியலாளர் சமுதிதவின் வீட்டுக்கு வெள்ளை வானில் ஆயுதங்களுடன் வந்ததாகக் கூறப்படும் சிலர், நேற்று முன்தினம் (14) மலக்கழிவு, கற்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இத்தாக்குதல் சம்பவத்தில் சமுதித்தவுக்கோ அவரது வீட்டில் உள்ளவர்களுக்கோ எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பில் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இதுவரையில் 21 பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



## வீடுகளுக்காக நிதியுதவி...

உயிரிழந்த இராணுவ வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள், காயமடைந்த, ஓய்வுபெற்ற, சேவையில் உள்ள இராணுவ வீரர்களுக்கு வீடுகளை நிர்மாணித்து கொடுப்பதற்கான நிதி உதவிகளை இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா வழங்கி வைப்பதைப் படங்களில் காணலாம்...

## சீமெந்தை பதுக்கி விற்றால் வழக்கு

சீமெந்து பக்கட்டுக்களை மறைத்து வைத்திருந்து, அவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்துவந்த வர்த்தகர் ஒருவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாக அநுராதபுர மாவட்ட நுகர்வோர் அபிவிருத்தி அதிகாரபை தெரிவித்துள்ளது.

சீமெந்து மூடைகளை அதிக விலைக்கு விற்பனை செய்வதாக குறித்த வர்த்தகருக்கு எதிராகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய, அந்த வர்த்தகர் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த 147 சீமெந்து மூடைகளும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை அநுராதபுரத்தில் அதிக விலையில் சீமெந்து மூடைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை



எடுக்கப்பட்டு வருவதாகவும் அம்மாவட்ட நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நுகர்வோருக்கு தேவையான அளவு சீமெந்து சந்தைகளில் உள்ள நிலையில், அநுராதபுரத்தில் மொத்தமாக சீமெந்து மூடைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் சிலர் அவற்றை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.



‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ கப்பல்:

## 78% சிதைவுகள் அகற்றப்பட்டன

இலங்கை கடற்பரப்பில் விபத்துக்குள்ளான ‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ கப்பலின் 78 சதவீத சிதைவுகள் இதுவரையில் அகற்றப்பட்டுள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தலைவர் தர்ஷனி லஹந்தபுர தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அமெரிக்க நிறுவனம் இது குறித்து அறிவித்துள்ளதாகவும், கடலில் மூழ்கியுள்ள இக்கப்பலை முழுமையாக அகற்றுவதற்காக, சீன நிறுவனமொன்றுக்கு சொந்தமான 02 கப்பல்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த இரு கப்பல்கள் ஊடாக, ‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ கப்பலை அகற்றுவது குறித்து, ஆரம்பக்கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருதாகவும், மே மாதத்துக்குள் இப்பணிகளை நிறைவு செய்வதாக சீன நிறுவனம் உறுதியளித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மலையக, முஸ்லிம்கள் தொடர்பிலும் இந்தியா கவனம் செலுத்த வேண்டும்

■ எஸ்.கணேசன்

மலையகத் தமிழர்கள், முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பிலும் இந்தியா கவனம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கும் மலையக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் பேராசிரியர் விஜயசந்திரன், இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு பொறிமுறையின்போது, மேற்படி மக்களின் அபிலாஷைகளும் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் நேற்று முன்தினம் (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்



கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இந்தியா சென்று, அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கருடன் பேச்சு நடத்தினார். இதன்போது அதிகாரப்பகிர்வின் அவசியம் பற்றி இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக இந்திய அரசுக்கும், வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கருக்கும் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் கட்சிகளின் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை என்பது 30 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துச்செல்கின்றது. இப்பிரச்சினைக்கான தீர்வாக இந்தியாவின் தலையீட்டுடன் 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டு, மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. எனவே, 30 வருடங்கள் கடந்தும் அதிகாரப் பகிர்வு நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக இருக்கின்றது என்பது, தற்போது உறுதியாகியுள்ளது.

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களின் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும், சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பாகும். அன்று வடக்கு, கிழக்கு பிரச்சினை பற்றியே கூடுதல் கரிசணை கொள்ளப்பட்டது. எனவே, 1987 காலப்பகுதியில் மலையகத் தமிழர்கள், முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகள் அதிகாரப்பகிர்வு பொறிமுறைக்குள் உள்வாங்கப்படவில்லை.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களுள் மூன்று இனங்கள் உள்ளன. மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள், ஈழத் தமிழர்கள் ஆகியோராவர். எனவே, அதிகாரப்பகிர்வு பொறிமுறையின்போது, இம்மூன்று இனமக்களின் அபிலாஷைகளும் உள்ளடக்கப்பட வேண்டும். அதற்கான அழுத்தம் இந்திய தரப்பில் இருந்து விடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

## ஒரு கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்கள் சிக்கின

மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தில் ஐந்து பொதிகளில் இருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான குஷ் கஞ்சா, எக்டஸி என்கிற போதை மருந்துகளை, சுங்கத் திணைக்களத்தின் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின்போது, போதைப்பொருள் இருக்குமென சந்தேகிக்கப்பட்ட ஐந்து பொதிகள் சோதனையிடப்பட்டுள்ளன.

இதன்போது பிரித்தானியா, ஜேர்மனி,



கனடா ஆகிய நாடுகளில் இருந்து கொழும்பு, கம்பஹா ஆகிய பிரதேசங்களில் உள்ள போலியான முகவரிகளுக்கு மேற்குறித்த போதைப்பொருட்கள் அனுப்பப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## மாலக கமகேவுக்குப் பிணை

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்த சமூக செயற்பாட்டாளர் ஷெஹான் மாலக கமகே, பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மாளிகாகந்த நீதவான் நீதிமன்ற நீதவான் தனுஜா லக்மாலி, 5 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் சந்தேகநபரை நேற்று (15) விடுதலை செய்தார்.

இதேவேளை சந்தேகநபர் வெளிநாடுக்கு செல்வதற்கு தடை விதித்த நீதவான், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 வரையிலான காலப் பகுதிக்குள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராக வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்.

ஷெஹான் மாலக கமகே, கடந்த வருடம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல், ஓர் அரசியல் சதியென விமர்சித்திருந்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஷெஹான் மாலக, “நான் இறைவன் ஒருவனுக்கே பயம். ஒரு வருடத்துக்கு முன்னர் ஊடக சந்திப்பொன்றை நடத்தி, நான் கூறிய விடயங்களுக்காக கைது செய்யப்பட்டிருந்தேன். வெள்ளை வானில் வந்த சி.ஐ.டியினர் நடுவீதியில் வைத்து என்னைக் கைது செய்திருந்தனர். பொதுமக்கள் முன்னிலையில், என்னை இவ்வாறு



கைது செய்தமை தொடர்பில் நான் கவலையடைகிறேன். பொதுமக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில், நான் கருத்துத் தெரிவித்திருந்ததாக சி.ஐ.டியினர் நீதிமன்றத்துக்கு தெரிவித்திருந்தார்கள். ஆனால், அவர்கள் எந்தவிதமான சாட்சிகளையும் நீதிமன்றில் சமர்ப்பிக்கவில்லை. இதனூடாக அன்று ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியவை உண்மையென நிரூபிக்கப்பட்டுள்ளன. நாட்டின் குடிமகன் என்றவகையில், நீதிமன்றத்தின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பதாகவும் அவர் இதன்போது கூறினார்.

# வெள்ளை வான் இறங்கியுள்ளது

■ கே.எல்.ரி.யுதாஜித்

கடந்த 2004 தொடக்கம் 2010, வரை நாட்டில் இருந்த வெள்ளைவான் கும்பல்களை வைத்து ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களை கடத்தியும் கொலைசெய்தும் ஆறுகளில் உடல்களை வீசியும் நடந்த சம்பவங்கள் மீண்டும் அரங்கேறுவதற்கான முன்னேற்பாடுகள் நடந்துள்ளன என்று இலங்கை தமிழரசு கட்சி ஊடக செயலாளரும், முன்னாள் எம்.பியுமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், இதன் ஆரம்பமாகவே, சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித சமரவிக்கிரமவின் வீட்டின் மீது வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை பார்க்கமுடிகின்றது. இலங்கையில் ஏறக்குறைய 46, ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் 36, தமிழ் ஊடகவியலாளர்களும் 08 சிங்கள ஊடகவியலாளர்களும் அடங்குகின்றனர். இலங்கையில் வாழமுடியாதென காரணம் காட்டி, ஊடகவியலாளர்கள் பலர் புலம்பெயர் நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். மட்டக்களப்பிலும் மாமனிதர் சிவராம், நாட்டுப்பற்றாளர் நடேசன் உள்ளிட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டதால் மட்டக்களப்பில் இருந்தும் பல ஊடகவியலாளர்கள் இங்கு வாழமுடியாமல் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைந்த வரலாறுகள் உள்ளன. எஞ்சியுள்ள மட்டக்களப்பு ஊடகவியலாளர்கள் பலருக்கு புலனாய்வாளர்களாலும் படையினராலும், அடிக்கடி விசாரணைகள் என்ற போர்வையில் அழைத்து மன அழுத்த விசாரணைகளை மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

ஊடக சுதந்திரம், ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு என வெளிப்படையாகக் கூறப்பட்டாலும் மறைமுகமாக நள்ளிரவு வேளைகளில் ஊடகவியலாளர்களின் வீடுகளுக்கு வெள்ளை வானில் சென்று அச்சுறுத்தும் படுமோசமான பயங்கரம் இலங்கையில் இடம்பெற்றுள்ளது. ஊடகவியலாளர் வீட்டுக்கு முன்பாக சுதந்திரமாக வெள்ளைவேனில் சென்று கல்லெறிந்து அச்சுறுத்திய விடயம், எதிர்காலத்தில் இன்னும் பல இடங்களில் ஏற்படக்கூடிய வாய்ப்பாக அமையும் என்பதையே இந்தச் சம்பவம் கோடிட்டுக்காட்டுகிறது என்றும் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

# துப்பாக்கி மீட்பு

■ தீஷான் அஹமட்

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூம்பூகார், பாலையூற்று பகுதியில் எஸ்.எம்.ஜீ ரக துப்பாக்கியையும் மூன்று மெகசின்களையும் விசேட அதிரடிப்படையின் உதவியுடன் திருகோணமலை பொலிஸார் மீட்டுள்ளனர்.
குறித்த பகுதியைச் சேர்ந்த நபர், குடிநீர் இணைப்பு பெறுவதற்காக நிலைத்தை அகழ்ந்த போதே, துப்பாக்கி மற்றும் மெகசின்கள் இருப்பதைக் கண்டு, பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதையடுத்தே இவை மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாகவும் அறிவித்துள்ளனர்.



# நியமனங்கள்

**உதயகுமாரன் குமணன்**

கந்தளாய் உதவி பிரதேச செயலாளராக உதயகுமாரன் குமணன் நியமிக்கப்படுள்ளார். 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து நிர்வாக சேவை உள்ளக பயிற்சிகளை முடித்துக்கொண்டதன் பின்னர் இந்நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை மூன்றாம் தர உத்தியோகத்தரான இவர், பேராதனை பல்கலைக்கழகத்தில் கணக்கியல் முகாமைத்துவத்தை பூர்த்தி செய்து கொண்டார்.

இவர், திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கத்து.

**எஸ். கமல்ராஜ்**

கோமரங்கடவெல உதவி பிரதேச செயலாளராக எஸ். கமல்ராஜ் நியமிக்கப்படுள்ளார். 2021 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, நிர்வாக சேவை உள்ளக பயிற்சிகளின் பின்னர் இந்நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை மூன்றாம் தர உத்தியோகத்தரான இவர் கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் ஆரம்பப் பட்டத்தை பூர்த்தி செய்துள்ளார்.


உதயகுமாரன் குமணன்


எஸ். கமல்ராஜ்

# வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப பல திட்டங்கள் முன்னெடுப்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

கொவிட்-19 தொற்று காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையிலும் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்தால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முஸாபிர் தெரிவித்தார்.

சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்துக்கு அமைய, 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட யோசனைக்கு அமைய, சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள சமுர்த்தி மானிய கொடுப்பனவு வழங்கும் வைபவம் சின்னப்பாலமுனை கிராம அபிவிருத்தி சங்கக் கட்டடத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். இமாமுதீன் தலைமையில் திங்கட்கிழமை (14) நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் சிறு கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி பயனாளிகள் இங்கு வழங்கப்படும் மானிய உதவிகளை வீண்விரயம் செய்யாமல், அதனுடாக தங்களது வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அரசாங்கத்தின் இலக்கினை அடைய முடியும்.

கொவிட்-19 தொற்று காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ள நிலையிலும் மக்களுக்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய சேவைகளும் நலன்புரி சேவைகளும் அரசாங்காத்தால் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஜே.எம். நிஹ்மதுல்லா, சமுர்த்தி முகாமையாளர் ஏ.எம். இமாமுதீன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## தீவுப் பகுதிக்கான போக்குவரத்து:

# கை விரிக்கிறார் யாழ். அரச அதிபர்

■ என். ராஜ், எஸ். நிதர்ஷன்

தீவுப் பகுதிக்கான பொதுப் போக்குவரத்தில் ஏற்படும் தடைகள் தொடர்பில் மாவட்ட மட்டத்தில் பல தரப்பட்ட கூட்டங்களை நடத்தியும் அதற்குத் தீர்வு கிடைக்கவில்லை என யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மகேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் மகேசன் கருத்துத் தெரிவிக்கையில்,

“தீவக பொதுப் போக்குவரத்தில் அடிக்கடி படகுகள் பழுதடைவதன் காரணத்தால் போக்கவரத்து தடைப்படுகின்றது. இந்தத் தீவக போக்குவரத்துக்கு, வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பாக இருந்து, அவர்கள் படகுகள், பாதை மற்றும் குமுதினி படகு போன்றவற்றை இயக்கி வருகிறார்கள்.

குமுதினிப் படகு பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. அதேபோல நெடுந்தாரகை, வடதாரகை, சமுத்திரா போன்ற படகுகள் பிரதேச சபையால் கூட்டுறவு அமைப்பினரால் இயக்கப்படுகிறது.

அதேவேளை, வடதாரகை இலங்கை கடற்படையினரால் இயக்கப்படுகின்றது



இந்தப் படகுகள் அடிக்கடி பழுதடைவதன் காரணமாக நெடுந்தீவுக்கான போக்குவரத்து அடிக்கடி தடைப்படுகிறது.

ஏனைய தீவுகளில் படகுப் பாதை தற்பொழுது சீரமைக்கப்பட்டு பயணம் தொடர்ந்தாலும் இயந்திரம் பழுதடைந்த நிலைமையில் பாதை இயக்க முடியாது இருப்பதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

நாங்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, மற்றும் ஏனைய திணைக்களங்களுடனும் வட மாகாண ஆளுநருடனும் இணைந்து சகல தரப்பினருடன் கலந்துரையாடல்களை நடத்தி, இந்தப் போக்குவரத்துப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்து இருக்கின்றோம்.

இருந்த போதிலும் சில நடைமுறை சிக்கல்கள், நிதி ஒதுக்கீடுகள் காரணமாக அவற்றை முழுமையாக அமல்படுத்துவது சிரமமாகக் காணப்படுகின்றது. இருந்தபோதிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, இந்தப் படகு போக்குவரத்து சேவை முழுவதையும் பொறுப்பெடுத்து, வகம் உள்ளடங்கலாக ஒரு மத்திய நிலையத்தை அமைத்து, தகுதிவாய்ந்த பொறியியலாளரின் கீழ், படகு பாதை சேவைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்வதற்கு உரிய வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதற்குரிய முன்மொழிவுகள், ஒரு வருடத்துக்கு மேலாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரிடம் கையளித்துள்ளோம். எனினும் மாவட்ட மட்டத்தில் பல தடவைகள் கூட்டங்களை நடத்தியும் அதற்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை.

படகுகள் திருத்தப்படாமைக்கு படகின் தன்மை காரணம். அதாவது திருத்தக் கூடிய இடம் வடக்கில் இல்லை. அது பிறிதோர் இடத்துக்குக் கொண்டு சென்று திருத்தி அமைக்க வேண்டும்.

எனவே, மாற்றீடாக பயன்படுத்த நமக்கு போதியளவு படகுகள் இல்லை என்பதும் ஒரு காரணமாக காணப்படுகின்றது.

மாற்றீடான படகுகள் வழங்கும் பட்சத்தில் அதற்குரிய எரிபொருள் வழங்குவதிலும் ஓர் இடர்பாடு காணப்படுகின்றது” என்றார்.

# வவுனியா கணேசபுரத்தில் விபத்து; இளைஞர் பலி

■ க. அகரன்

வவுனியா, கணேசபுரம், மரக்காரம்பளை வீதியில் நேற்று (15) காலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

வவுனியா, குளுமாட்டுச்சந்தியில் இருந்து கணேசபுரம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த இளைஞர், எதிரே வந்துகொண்டிருந்த இரு மோட்டார் சைக்கிள்களுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றது.

இவ்விபத்தில் படுகாயமைடந்த இளைஞர் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.



சம்பவ இடத்துக்குச் சென்ற நெளுக்குளம் பொலிஸார் இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை மேற்கொண்டதோடு, விபத்துடன் தொடர்புடைய ஏனைய இரு மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களான இளைஞர் ஒருவரையும், பெண் ஒருவரையும் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மரணமடைந்த இளைஞன் பண்டாரிக்குளத்தினை சேர்ந்த ஸ்ரீரஞ்சன் (வயது - 32) எனப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

# மயிலிட்டி துறைமுகத்தின் 2ஆம் கட்ட அபிவிருத்தி பணிகள் ஆரம்பம்

■ எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணம், மயிலிட்டி துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் நேற்று முன்தினம் (14) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

துறைமுகத்தின் பகுதிகளை ஆழ, அகலம் ஆக்குதல், படகுகளை கட்டிவைக்க ஏற்றவாறு ஆழமாக்கி குறித்த பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் தொழிலை மேம்படுத்துவதற்கான திட்டமிடல், தொழில் செய்யும் மீனவர்கள் தங்குவதற்கான வசதி, சிற்றுண்டிச்சாலை, படகுகள் கட்டுவதற்கும் திரும்பிச் செல்வதற்கான பாதைகளை அமைத்தல், துறைமுகத்தை அழகுபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்களை உள்ளடக்கிய இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.



இந்த வருட இறுதிக்குள் இரண்டாம் கட்ட பணிகள் முடிவடைந்து, மூன்றாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கும் என டக்ளஸ் தேவானந்தா இதன்போது குறிப்பிட்டார்.

குறித்த விடயம் தொடர்பான மாதிரி படம் காட்டப்பட்டு திட்ட முகாமையாளரால் அது தொடர்பில் அமைச்சருக்கு விளக்கமளிக்கப்பட்டது. கலந்துரையாடலில் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் எஸ். சிவஸ்ரீ, அமைச்சின் செயலாளர்கள் நீரியல் வழங்கல் திணைக்கள அதிகாரிகள், மீனவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு

# சிவகரனுக்கு அழைப்பு

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரனை வெள்ளிக்கிழமை (18) காலை 9.30 மணிக்கு கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸார் ஊடாக குறித்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சிவகரனை கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் முன்னிலை ஆகும் போது அன்றைய தினம் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் சம்பந்தமான அனைத்து



ஆவணங்களையும் எடுத்து வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தொழிலாளிக்கு நீதி கிடைக்காவிட்டால்

# “மக்கள் சக்தியை நான் நிரூபிப்பேன்”

## வடிவேல் சுரேஸ் எம்.பி தெரிவித்தார்.

ராமு தனராஜா

இலங்கையின் தொழில் சட்டங்கள் மீறப்பட்டு, காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகள் ஆங்காங்கே அரங்கேறி வருவதாகத் தெரிவித்த பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், தோட்ட நிர்வாகத்தால் பாதிக்கப்பட்ட கோணக்கலை தொழிலாளிக்கு நீதி கிடைக்காவிட்டால், தனது மக்கள் சக்தியை நிரூபிக்கவுள்ளதாக எச்சரித்துள்ளார்.

ஹாலிஎலயில் அலுவலகத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

பசறை - கோணக்கலை தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பட்டியலில் கோதுமை மாவுக்காக அறவிடப்பட்டிருக்கும் கட்டணத்துக்கான கோதுமை மா வழங்கப்படாமை தொடர்பில், ஊடகத்துக்கு கருத்து தெரிவித்த தொழிலாளி ஒருவர், தோட்ட நிர்வாகத்தால் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஜனநாயக நாட்டில், தமக்கு ஏற்படும் அநீதிகளை ஊடகத்தின் மூலமாக வெளிக்கொண்டு வருவது குற்றமா? இந்தச் செயற்பாட்டின் மூலமாக, ஜனநாயக உரிமை, தொழிற்சங்க உரிமை போன்றவை மீறப்பட்டு இருக்கிறது. எனவே, உடனடியாக தோட்டத் தொழிலாளிக்கு தோட்ட நிர்வாகம் வேலை வழங்காவிட்டால், எனது மக்கள் சக்தி என்னவென்று காட்டுவதற்கு நான் ஆயத்தமாகவே உள்ளேன்.



> பசறை – கோணக்கலை தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பட்டியலில் கோதுமை மாவுக்காக அறவிடப்பட்டிருக்கும் கட்டணத்துக்கான கோதுமை மா வழங்கப்படாமை தொடர்பில், ஊடகத்துக்கு கருத்து தெரிவித்த தொழிலாளி ஒருவர், தோட்ட நிர்வாகத்தால் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்

அத்துடன், இந்த அநீதி சம்பந்தமாக தொழில் திணைக்களத்தில் முறைப்பாடு செய்ய உள்ளேன் என, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் மேலும் தெரிவித்துள்ளார்.

# சாரதி அனுமதிப்பத்திரம் 10 வருடங்களுக்கு இரத்து

காமினி பண்டார

மதுபோதையில் ஓட்டோவை செலுத்திய குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் ஆறு மாதகாலத்துக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட ஒருவர், தனது தண்டனைக் காலம் நிறைவடையும் முன்னரே, மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி ஓட்டோவை மீண்டும் செலுத்திய நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மஸ்கெலியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேகநபரிடம் 75,000 ரூபாய் அபராத தொகையை அறவிடுமாறு நீதவான் அசங்கா ஹெட்டிவத்த உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் அவரது சாரதி அனுமதிப்பத்திரத்தை 10 வருடங்களுக்கு இரத்து செய்யுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மலையக மக்களுக்கு வழங்கப்பட்ட

# உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன

## ரமேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு

எஸ்.கணேசன்

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின்கீழ் மலையக மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டுவருகின்றன. எனவே, உறுதிமொழியை மீறும் விதத்தில் காங்கிரஸ் செயற்படாது” என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஷ்வரன் தெரிவித்தார்.

அம்பகமுவ பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் சமூர்த்தி உதவி பெறும் 100 குடும்பங்களுக்கு அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி உதவி கொடுப்பனவு பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு ஹட்டன் டிக்கோயா நகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (14) இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ அரசாங்கம் எத்தகைய நல்ல விடயங்களை செய்தாலும் அதனை விமர்சித்து, குறைகூறும் விதத்திலான அரசியலையே எதிரணிகள் நடத்திவருகின்றன. மலையகத்திலுள்ள கட்சிகளும் அப்படிதான். பதவிகள் கிடைக்கவில்லை என்பதற்காக போலி பரப்புரைகளில் ஈடுபட்டுவருகின்றன. அவற்றை பொருட்படுத்தாமல் நாம் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றோம்; மக்களுக்கும் இது புரியும்.


கோதுமை மா விலை அதிகரிக்கப்படும்போது, பெருந்தோட்ட மக்களே உணவுக்காக அதிகளவு கோதுமை மாவை நுகர்கின்றனர். எனவே, அம்மக்களுக்கு சலுகை விலையில் கோதுமை மா வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. இது தொடர்பில் எமது பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சு நடத்தினார். அதன் பலனாக 80 ரூபாய்க்கு கோதுமை மா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில் மலையக மக்கள் யாசகர்களா, எதற்காக கோதுமை மா வழங்கப்படுகின்றது என மலையகத்திலுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விமர்சிக்கின்றனர். இப்படி குறைகூறி அரசியல் நடத்துவதே அவர்களின் நோக்கம் என்பது இதன்மூலம் உறுதியாகின்றது” என்றார்.



மத்திய மாகாண விளையாட்டு கட்டடத் தொகுதி

# இரஜவெல்ல இந்து தேசிய கல்லூரிக்கு கையளிப்பு



எஸ்.கணேசன்

கண்டி, இரஜவெல்ல இந்து தேசிய கல்லூரியின் விளையாட்டு துறைக்கு புதிய உத்வேகம் அளிக்கும் வண்ணம், திகன நகரில் அமைந்துள்ள மத்திய மாகாண விளையாட்டு கட்டடத் தொகுதியை அக்கல்லூரி மாணவர்கள் இலவசமாக பயிற்சி பெறவும் விளையாட்டுப் போட்டிகள், மெய்வல்லுநர் போட்டிகள், உடற்பயிற்சி போன்றவற்றை மேற்கொள்ள வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதி மத்திய மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் திருமதி சுவர்ணா பெரேராவால் வழங்கப்பட்டுள்ளதுடன், தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் பிரஜாசக்தி அபிவிருத்தி செயற்திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் அருள்சாமி தலைமையில் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர்களிடம் கையளிக்கப்பட்டது.



## முத்தேர் பவனி...

பொகவந்தலாவ நகர் அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் 86ஆம் ஆண்டு வருடாந்த முத்தேர் பவனி நேற்று (15) நடைபெற்றது. கிரியா ஜோதி ஈசான சிவாச்சாரியார் சிவஸ்ரீ வெங்கடேஷ் நாராயண குருக்கள், சர்வ சாதாகாச்சாரியார் சாதக விற்பனர் பிரம்மஸ்ரீ இராம பாஸ்பர குருக்கள், ஆலய பிரதம குரு சிவாகம வேத சிரோன்மணி நெடுந்தீவு பத்மநாத சனற்குமார சிவாச்சாரியார் ஆகியோரின் தலைமையில் முத்தேர் பவனி நடைபெற்றது. (எஸ். சதீஸ்)

மாவடி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின்

# மாசி மக திருவிழா

இரா.யோகேசன்

ஹட்டன், பண்டாரநாயக்க நகர் அருள்மிகு மாவடி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் 44ஆவது வருட மாசி மக திருவிழாவும் நவதுர்க்கா தாரிஹா மஹாசண்டி ஹோமகுளிர்த்தி அபிஷேகமும் இன்று (16) ஆரம்பமாகின்றது.

இராம சஞ்சீவி கோவிலிலிருந்து பாற்குடபவனி இன்று (16) காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

17ஆம் திகதி 109 சங்காபிஷேகமும் குளிர்த்தி பொங்கல் பூஜையும் இடம்பெறும். 18ஆம் திகதி காலை 10 மணிக்கு மாவிளக்கு பூஜை இடம்பெறுவதோடு மாலை 3 மணிக்கு அம்பாளுக்கு மஞ்சள் நீராட்டு விழா இடம்பெறும். எதிர்வரும் 23ஆம் திகதி நவ துர்க்காசண்டி பூஜை இடம்பெறும்.

போலி வைத்தியர் ஒருவர்


# போதை மாத்திரைகளுடன் கொட்டகலையில் கைது

ரஞ்சித் ராஜபக்ஷ

வைத்தியர் எனத் தன்னை அடையாளம் காட்டிக்கொண்டு பிரதேச இளைஞர்களுக்கு போதைப் பொருட்களை விற்பனை செய்து வந்த போலி வைத்தியர், தலவாக்கலை பொலிஸ் விசேட படையினரால் நேற்று முன்தினம் (14) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொட்டகலை, கொமர்சல் பகுதியில் உள்ள வீடொன்றில் போதைப் பொருள் வர்த்தகத்துடன், நோயாளர்களுக்கு சிகிச்சையளித்து வருகின்றமை தொடர்பில், பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கொட்டகலை பகுதியிலுள்ள மருந்து விற்பனை நிலையமொன்றில் வேலை செய்து வருவதாக தெரிவித்துள்ள பொலிஸார், சந்தேகநபரிடமிருந்து 338 போதை



மாத்திரைகளையும் கைப்பற்றியுள்ளதுடன் குறித்த போதை மாத்திரையை பெற்றுக்கொள்ள வருகைத் தந்த இரண்டு இளைஞர்களையும் இதன்போது கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக திம்புள்ள-பத்தனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காடுகளுக்கு தீ வைப்பதால்

# குடியிருப்புகளை நாடும் வன விலங்குகள்

மலைவாஞ்ஞன்


நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சியான வானிலையை அடுத்து, காடுகள் தீவைக்கப்படுவதால் காட்டு விலங்குகள் மக்கள் குடியிருப்புகளை நாடி வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

நீர் மற்றும் உணவைத் தேடியே குறித்த விலங்குகள் மக்கள் குடியிருப்புகளை நோக்கி வர ஆரம்பித்துள்ளன.

குறிப்பாக, ஹட்டன் நகரை அண்மித்த தும்புறுகிரிய, ஆரியகம உள்ளிட்ட பல பிரதேசங்களுக்கு குரங்குகள் கூட்டம் கூட்டமாக உணவு தேடி வர ஆரம்பித்துள்ளன.

இதனால் வீட்டுத்தோட்டங்களில் உள்ள வாழை உள்ளிட்ட பயன்தரும் மரங்களை இந்தக் குரங்குகள் சேதமாக்க ஆரம்பித்துள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், மின்இணைப்பு வயர்கள், தொலைகாட்சி இணைப்பு வயர்கள் உள்ளிட்டவைகளையும் குரங்குகள் சேதப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர்.



‘என்டபிரைஸ்’ செயற்றிட்டத்தின் சந்தர்ப்பத்தை

# மலையக இளைஞர்கள் கைவிட்டுவிடக் கூடாது

எம். செல்வராஜா

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிரலில் ‘என்டபிரைஸ்’ செயற்றிட்டத்தின் வியாபார சேவைகளை, எமது சமூக இளைஞர், யுவதிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும் என தெரிவித்துள்ள பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார், எமது சமூகம் பயன்பெறக் கூடிய வகையில் கிடைத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தைக் கைவிட்டு விடக்கூடாது என்றார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிரலில்,‘என்டபிரைஸ்’ செயற்றிட்டத்தின் வியாபார சேவை நிலையக் கூட்டம், நேற்று முன்தினம் (14) பதுளை மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றதுடன், இதில் கலந்துகொண்ட போதே,



அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இவ் வேலைத்திட்டத்தில் மலையகப் பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளை பெருமளவில் இணைத்துக் கொள்வதன் அவசியம் குறித்தும், இவ்வேலைத்திட்டம் பெருந்தோட்ட பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் சம்பந்தப்பட்டவர்களுடன் விரிவாகப் பேசியதாகத் தெரிவித்தார்.

நிச்சயமாக, இவ் வேலைத்திட்டத்தில் பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளை இணைத்துக்கொண்டு அவர்கள் பயன்பெறும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, இவ்வேலைத்திட்டத்தை பெருந்தோட்டப் பகுதிகளிலும் விஸ்தரிக்கவும் நடவடிக்கைகளை எடுப்பதாக நிதி கணக்காய்வுத் தலைவர் தில்மன் எங்கரர் உறுதியளித்துள்ளார். எனவே, எமது சமூக இளைஞர், யுவதிகள் எத்தகைய தாமதங்களுமின்றி இணைந்து கொள்ளல் வேண்டும்.

அதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை, என்னால் மேற்கொள்ள முடியும். இவ்வேலைத்திட்டத்தின் செயற்பாடுகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இடம்பெறும். ஆகையால் எம்மவர்கள் தமிழ் மொழி மூலமே இவ் வேலைத்திட்ட செயற்பாடுகளை இலகுவாக மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.

மாத்தளையில்

# நகர அபிவிருத்தி திட்டம் ஆரம்பம்



மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை நகர வீதியின் இருமருங்குகளையும் அலங்கரிப்பதுடன் பாதுகாப்பு வேலிகளை அமைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாத்தளை நகர மேயர் சந்தனம் பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாலக பண்டார கோட்டேகொடவின் அபிப்பிராயத்துக்கு அமைய, இந்த நகர அபிவிருத்தி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# விடுவிக்கப்படும் பயங்கரவாத கைதிகளுக்கு மறுவாழ்வு கொடுங்கள்

"எங்களையும் விடுவித்துவிட்டனாரா?" என மூக்கின் மேல் விரலை வைத்து வியப்படையும் அளவுக்கு, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து, நீண்ட நாள்களாகத் தடுத்து வைத்திருந்த கைதிகளில் பலர், தொடர்ச்சியாக விடுவிக்கப்பட்டுள்ளனர். சுமார் பத்து அல்லது 12 வருடங்களுக்கு மேல், தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களே இவ்வாறு விடுவிக்கப்படுகின்றனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இன்னும் சிலருக்கு எதிராக, வழக்குத் தாக்கல் செய்யப்படாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தங்களுடைய தண்டனைக் காலம் நிறைவடைவதற்கு ஒருசில மாதங்கள் இருக்கும் தறுவாயிலேயே, வயது முதிர்ந்தவர்கள் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது, சர்வதேசத்திடமிருந்து நன்மதிப்பை பெற்றுக்கொள்வதற்கான ஒரு காய்நகர்த்தல் என்றால் தவறில்லை. ஏனெனில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பிக்கவிருக்கும் நிலையில், இவற்றையெல்லாம் எதிர்பார்க்கமுடியும். "அப்படியில்லை, நாங்கள் சட்டத்தின் பிரகாரம்தான் செயற்படுகின்றோம்" என அரசாங்கம் பதிலளித்தால், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நீண்டகாலமாக சிறையிலிருக்கும் கைதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யாதது ஏன்? தண்டனைக் காலத்தின் நிறைவு நாள் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், வயது முதிர்ந்தவர்களை மட்டும் விடுவிப்பது ஏன்? உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புகளின் அழுத்தங்களின் பின்னர், சிலரை விடுவித்தமையின் பின்னணி என்ன? என்றெல்லாம் கேட்கவேண்டும்.

திருத்தப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம், பாராளுமன்றத்தில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டது. "இது சர்வதேசத்தை ஏமாற்றும் நாடகம்" என, அந்தத் தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள், விமர்சனங்களை முன்வைத்தனர். அச்சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டுமென்ற கோரிக்கைகளும் வலுப்பெற்றுள்ளன. பயங்கரவாத தடை சட்டத்துக்கு எதிராக, சர்வஜன நீதி என்ற அமைப்பு, கொழும்பில் நேற்று (15) கையெழுத்து பெறும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது.

ஆனால், பயங்கரவாத சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளோமென ஐ.நாவுக்கும் சர்வதேசத்துக்கும், அரசாங்கம் கண்கட்டி வித்தையைக் காண்பித்துக் கொண்டிருக்கின்றது. இந்தச் சட்டத்தின் கீழ், கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களில் சிலர், ஏதாவொரு காரணத்துக்காக மீளவும் கைது செய்யப்பட்டனர். அல்லது, தென்னிலங்கையில் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, புலிப்பூச்சாண்டியை காண்பித்து, ஆயுதங்களை மீட்டு, அரசியல் நாடகத்தை ஆடிவிடுவர். இன்னும் பயங்கரவாதத்தின் நிழல் ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கிறது என சர்வதேசத்துக்கு காண்பிக்கவும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமென்ற பிரசாரத்தை மேற்கொள்ளவுமே இவை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடர் வந்துவிட்டால், 'மின்சாரக் கதிரை' பிரசாரத்துக்கு குறைவே இருக்காது. தேர்தல் காலமெனில், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களின் இரத்தத்தைச் சூடாக்கி, குளிர்காயும் பிரசாரங்களை மேற்கொள்வர்.

வழக்கிலிருந்து விடுதலை செய்யப்படுபவர்களை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யக்கூடாது. அவர்களின் மறுவாழ்வுக்கு வழிசமைக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதனூடாகவேனும் அவ்வாறாவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றவேண்டுமென நாமும் வலியுறுத்துகிறோம்.




தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

மாறுதலின்றி மாற்றம் இல்லை. ஒரே மாதிரி உலகம் இயங்குவதும் இல்லை. இந்த வையகம், மாறுதலுடன் இணைந்தே பயணிக்க வேண்டியுள்ளது. எமக்குப் பிடிக்காதவை கூட, எம்முடன் ஒட்டிக்கொள்கின்றன.

எனினும், காலச்சுழற்சியில் நவீனமான விடயங்களாக மீண்டும் தோன்றிவிடுகின்றன. இவற்றை நிராகரிப்பது நல்லதுமல்ல; மெஞ்ஞானம், விஞ்ஞானம், நாஸ்தீகம், ஆத்மீகம் என்பவை தொடர்ந்தும் மக்களை வந்தடைந்த வண்ணம், காலம்பூராவும் பேசப்படுகின்றன.

விஞ்ஞான வளர்ச்சி, கண்டுபிடிப்புகள் காலமாற்றத்துக்கு ஏற்ப, மக்களுக்குள் புகுந்து கொள்கின்றன.இவை ஆரோக்கியமானவை; என்றும் வளர்ந்தபடியே இருக்கும். நவநாகரிகம் தானாகவே மக்களைச் சென்றடைகின்றது. அதைத் தூற்றுபவர்களும் அதற்குள் மூழ்கிப் போகின்றார்கள்.

ஒரே திசைப் பார்வைகள், அலுத்துப்போய் விடுகின்றன. அதற்காக, நிரந்தரமான ஒழுக்கம் மாறவே கூடாது. முன்னேற்றம் எதுவோ, அதை ஏற்றுக்கொள்க!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதிகளில் நெல்

## உலரவிடுவதால் போக்குவரத்துக்கு இடையூறு

அம்பாறை மாவட்டத்தில், அறுவடை செய்யப்பட்ட நெல்லை, பிரதான வீதிகள், உள்ளக வீதிகளில் உலரவிடுவதால், போக்குவரத்து சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன.

நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, சொறிக்கல்முனை, சவளக்கடை, மத்தியமுகாம் போன்ற பிரதேசங்களில் இச்செயற்பாடு தொடர்கதையாக உள்ளது.

அம்பாறை மாவட்டத்தில், நெல் அறுவடை தற்போது மும்முரமாக நடைபெறுகின்றது. அறுவடை செய்யப்பட்ட, ஈரப்பதமான நெல்லை உலரவிடுவதற்காக, விவசாயிகள் இச்சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். போதியளவு நெல் உலரவிடும் தளங்கள் இன்மையால், வீதிகளில் நெல்லை உலரவிடும் நிலைமை காணப்படுவதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

இவ்வாறு வீதிகளின், ஒருபக்கத்தில் நெல்லைக் குவித்து உலர விடுவதால், வீதியின் ஒருபக்க போக்குவரத்து தடைப்படுவதுடன் வீண் விபத்துகளும் ஏற்படுகின்றன. இவ்வாறாக வீதிகளைப் பயன்படுத்துவது, தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், விவசாயிகள் நெல்லை உலரவிடக்கூடிய வகையில், நிரந்தத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

பாறுக் ஷிஹான்



### ஊழியர் சேமலாப நிதியத்தில்

# அரசாங்கம் கைவைக்கப் போகிறதா?



எம்.எஸ்.எம். ஐயூப்

ஊழியர் சேமலாப நிதியத்தை, அரசாங்கம் சூறையாடப் போவதாக, குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அரசாங்கம், தற்போது எதிர்நோக்கி இருக்கும் பொருளாதார நெருக்கடியின் அளவைக் கருத்தில் கொள்ளும் போது, இவ்வாறு சந்தேகம் எழுவது நியாயமே!

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம், 2011ஆம் ஆண்டும் அந்நிதியை, திறைசேரியின் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வர முயற்சித்ததை நினைக்கும் போது, இந்தச் சந்தேகம் வலுக்கிறது. அன்று நாடெங்கிலும் தனியார்துறை ஊழியர்கள், அரசாங்கத்தின் திட்டத்துக்கு எதிராக நடத்திய போராட்டத்தால், அரசாங்கம் தனது முயற்சியைக் கைவிட நேர்ந்தது.

அவ்வாறு இருக்க, அதே ஆட்சியாளர்கள் மீண்டும் அந்நிதியில் இருந்து, பாரியதொரு வரியை அறவிடும் வகையில், ஒரு சட்டமூலத்தை வரைந்துள்ளனர். கடந்த ஏழாம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலமே, அச்சட்ட மூலம் முன்வைக்கப்பட்டு இருக்கிறது. அது நேரடியாகவே சேமலாப நிதியைக் குறிவைக்காவிட்டாலும், அச்சட்ட மூலம் திருத்தமின்றி நிறைவேற்றப்பட்டு அமலாக்கப்பட்டால், அந்நிதியே மிகவும் கூடுதலாகப் பாதிக்கப்படும்.

உத்தேச சட்டத்தின்படி, 2020-2021ஆம் ஆண்டு 2,000 கோடி ரூபாய்க்கு மேல் இலாபம் அடைந்துள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள், அந்த இலாப வருமானத்தில் 25 சதவீதத்தை வரியாகத் திறைசேரிக்குச் செலுத்த வேண்டும். இது, ஒரு முறை மட்டுமே அறவிடப்படும் வரியாகும். அதாவது, வருடாவருடம் அறவிடப்படும் வரி அல்ல! எனவே, மேலோட்டமாகப் பார்க்கும் போது, ஊழியர் சேமலாப நிதியத்துக்கு இந்தச் சட்டத்தால் எவ்வித பாதிப்பும் இல்லைப் போல் தான் தெரிகிறது.

ஆனால், இச்சட்ட மூலத்தின் இறுதியில் வரும் சில சொற்களுக்கு, அர்த்தம் வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் தான் சிக்கல் இருக்கிறது. அந்த வரைவிலக்கணத்தின் படி, நிறுவனம் (company) என்றால், 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்தாபனங்களாகும். எனவே, இது எவர் எவரை பாதிக்கப் போகிறது என்பதைப் பார்க்க, 2017ஆம் ஆண்டு உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை புரட்டிப் பார்க்க வேண்டும்.

சேமலாப நிதியங்களும் நிறுவனங்கள் என்பதற்குள் அடங்குகின்றன என்று, அந்த இறைவரிச் சட்டத்தின் வரைவிலக்கணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, புதிய சட்ட மூலத்தின்படி ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், மற்றும் அது போன்ற சேமலாப நிதியங்களும் நிறுவனங்கள் (company) என்றே கருதப்படுகின்றன.

அதாவது, உத்தேச சட்டத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் இலாபத்தில் இருந்தும் 25 சதவீத மேலதிக வரி செலுத்தப்பட வேண்டும்.

எனவேதான் தெழிற்சங்கங்களும் எதிர்க்கட்சிகளும், இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவை பாதிக்கப்படப் போவதாகக் கூறுகின்றன. அது உண்மைதான்.

ஆனால், ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான கடந்த அரசாங்கத்தின் காலத்திலேயே, 2017ஆம் ஆண்டு இறைவரிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதைச் சுட்டிக் காட்டும் ஆளும் கட்சித் தரப்பினர், தாம் ஊழியர் சேமலாப நிதியத்தை குறிவைக்கவில்லை என்பதைப் போல், கடந்த அரசாங்கத்தின் காலத்தில், கம்பனி என்பதற்குள் சேமலாப நிதியங்களையும் உள்ளடக்கியதாலேயே புதிய சட்டத்தால், ஊழியர் சேமலாப நிதியமும் ஊழியர் நம்பிக்கை நிதியமும் பாதிக்கப்படப் போகின்றன என்று கூறுகின்றனர்.

காரணம் அதுவாக இருந்தால், அதாவது ஊழியர் சேமலாப நிதியத்தில் கைவைக்கும் நோக்கம் அரசாங்கத்திடம் இல்லாவிட்டால், அதற்கு அமையவே சட்டம் வரையப்பட வேண்டும். ஆனால், அரசாங்கம் அவ்வாறு செய்யவில்லை.

இந்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால், அதன் கீழ் அரசாங்கம் பெறும் மிகப் பெரிய வருமானம், ஊழியர் சேமலாப நிதியத்தின் இலாபத்தின் மீது விதிக்கப்படும் வரியேயாகும். ஏனெனில், நாட்டில் உள்ள மிகப் பெரும் நிதியம் ஊழியர் சேமலாப நிதியமாகும். அதில், சுமார் 1,300 பில்லியன் (ஒரு இலட்சத்து முப்பதாயிரம் கோடி) ரூபாய் இருக்கிறது. இந்தச் சட்டத்தால் அரசாங்கத்துக்குக் கிடைக்கப் போகும் மிகப்பெரும் வரித் தொகை, எங்கிருந்து கிடைக்கப் போகிறது என்பதையாவது தெரியாமல், திறைசேரி அதிகாரிகள் இந்தச் சட்டமூலத்தை தயாரித்தார்கள் என்று நாம் நம்ப வேண்டுமா?

உத்தேச சட்டத்தால் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவை பாதிக்கப்படாது என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, திங்கட்கிழமை (14) அமைச்சரவையில் கூறியதாகச் செய்திகள் கூறுகின்றன. அது, தனியார்துறை ஊழியர்கள் ஆறுதல் அடையும் செய்தியாகும்.

ஆனால், இந்தச் சட்டத்திலிருந்து அந்த இரண்டு நிதியங்களுக்கும் விலக்கு அளிப்பது எவ்வாறு என்பதை, அவர் கூறியதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்படவில்லை. எனவே, சட்டப்படி அவ்வாறு விலக்களிக்கப்படாவிட்டால், வெறும் வாய்மூல உத்தரவாதங்களால், இந்த இரண்டு நிதியங்களுக்கும் ஏற்படப் போகும் பாதிப்பை தடுக்க முடியாது.

இப்போது, பல தொழிற்சங்கங்கள் இந்தச் சட்டமூலத்தை வாபஸ் பெறுமாறு கோரி, ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடத் தயாராகின்றன. 2011ஆம் ஆண்டு ஊழியர் சேமலாப நிதியத்தைப் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் கீழ் இயங்கும் தொழிற்சங்கங்கள் இவற்றில் முக்கியமானவையாகும்.

அன்று அத்தொழிற்சங்கங்கள் நடத்திய போராட்டமொன்றின் போது, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த ரொஷேன் சானக்க என்ற இளைஞர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உண்மையிலேயே, அரசாங்கம் ஊழியர் சேமலாப நிதியத்தை கருத்தில் கொண்டு, இந்தச் சட்டமூலத்தை தயாரிக்கவில்லை என்றும் அரசாங்கம் அந்நிதியத்தின் வருமானத்தை சூறையாட நினைக்கவே இல்லை என்றும் அரச தலைவர்கள் கூறுவதாக இருந்தால், தற்போது எழுந்துள்ள சர்ச்சையை மிக எளிதில் தீர்க்கலாம்.

அதாவது, தற்போது சமர்ப்பித்துள்ள வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெற்று, ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கும் விலக்களிக்கும் வகையிலான வாசகமொன்றையும் சேர்த்து அச்சட்ட மூலத்தை மீண்டும் வர்த்தமானியில் பிரசுரிக்கலாம். அல்லது, சட்டமூலம் நாடாளுமன்றத்தில் குழுநிலையில் விவாதிக்கப்படும் போது, அதற்குத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வரலாம்.

எனினும், அரசாங்கம் குழுநிலை விவாதத்தின் போது அவ்வாறானதொரு திருத்தத்தைக் கொண்டு வரும் என்பதற்கான உத்தரவாதம் என்ன? கொண்டு வந்தாலும் கொண்டு வரும் திருத்தம் எவ்வாறானது? எதையும் நிறைவேற்றிக் கொள்வதற்கான பெரும்பான்மை பலம், அரசாங்கத்திடம் இருப்பதால் எதிர்க்கட்சிகள் அவ்வாறான உத்தரவாதத்தை ஏற்குமா என்பது சந்தேகமே.

அரசாங்கம் முன்வைத்துள்ள 'ஒரு இலட்சம் வேலைகள்' என்ற வேலைத்திட்டத்துக்கு பணம் திரட்டுவதற்காகவே, இவ்வாறு ஊழியர் சேமலாப நிதியத்தில் கைவைக்க அரசாங்கம் முற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. அந்தத் திட்டமானது பொருளாதார அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டதன்றி, அரசியல் நோக்கம் கொண்டது என்றும் அக்கட்சிகள் கூறுகின்றன. அது உண்மையே!

அந்த வேலைத்திட்டத்தின் கீழ், எங்கெங்கு என்னென்ன வேலைகள் மேற்கொள்ளப்படப் போகின்றன என்பது ஒருவருக்கும் தெரியாது. நாட்டு அபிவிருத்திக்கான குறிப்பிட்ட வேலைகளை அடையாளம் கண்டு, அவற்றை நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் அதனை ஏற்றுக் கொள்ளலாம். அவை ஒரு இலட்சமாக இருக்கும் என்று கூற முடியாது. அது குறையலாம், கூடலாம். முன்னரே, வேலைகளின் எண்ணிக்கையை தீர்மானிப்பதாக இருந்தால், குறிப்பிட்ட பொருளாதார இலக்கொன்று இல்லாத வேலைத்திட்டம் இதுவாகும்.

எனவேதான், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கருத்தில் கொண்டு, ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்களின் பெயரில், பிரதேச ரீதியாக ஏதாவது வேலைகளைச் செய்து, அந்தத் தேர்தலின் போது அவர்களை வெல்லச் செய்வதே, இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. அத்தோடு, அந்த வேட்பாளர்கள் தம்மிடம் வரும் பணத்தில் ஒரு பகுதியை சுருட்டிக் கொள்ளவும் கூடும்.

பொதுஜன பெரமுன இதற்கு முன்னரும் தேர்தலை நோக்கமாகக் கொண்டு, இது போன்று செயற்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு, ஜனாதிபதி தேர்தலை அடுத்து பொதுத் தேர்தலைக் கருத்திற்கொண்டு அரசாங்கம், மக்கள் எதிர்பார்க்காத வகையில் பல வரிச் சலுகைகளை வழங்கியது. அதன் மூலம் வருடத்துக்கு 65,000 கோடி ரூபாயை திறைசேரி இழந்து வருவதாக மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் ஒருவர் கூறியிருந்தார்.

அதாவது, அரசாங்கம் அந்த நடவடிக்கையின் மூலம், கடந்த இரண்டு ஆண்டுகளில் 130,000 கோடி ரூபாயை இழந்துள்ளது. அதனை இழக்காவிட்டால் அரசாங்கம் இன்று இந்தளவு பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கத் தேவையில்லை.

ஊழியர் சேமலாப நிதியமானது குறிப்பாக, தனியார்துறை ஊழியர்கள் தமது இறுதிக் காலகட்டத்தில் வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக, 1958ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இடதுசாரி தொழிற்சங்கங்கள் நீண்டகாலமாக நடத்தி வந்த போராட்டங்களின் பயனாகவே அப்போதைய அரசாங்கம் அந்நிதியத்தை ஸ்தாபித்தது. அதில் கைவைப்பதாக இருந்தால், அது மிகப் பெரும் கொடுமையாகும்.




# அமைச்சரவைத் தீர்மானங்கள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தலைமையில் நேற்றுமுன்தினம் (14) நடைபெற்ற வராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில..

## 01. இடையிலான ஆய்வு ஒத்துழைப்பு

மன இறுக்க (Autism) நோயின் சிகிச்சைநிலை அறிகுறிகள் பற்றி கற்றறிந்து கொள்வதற்கான ஆய்வுக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் ஏ மற்றும் எம் பல்கலைக்கழகத்திற்கும் (Texas A & M University) இடையில் பரிமாற்று ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

## 02. நிவாரணப் பொதி வேலைத்திட்டம்

2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட விரிவான பொருளாதார அபிவிருத்தி தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் ஒரு வேலைத்திட்டமாக வீட்டுமட்ட பொருளாதாரப் பாதுகாப்பு (நிவாரணப் பொதி) வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வேலைத்திட்டத்தின் கீழ் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள அழுத்தங்களைக் குறைப்பதற்காக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் குறைந்த வருமானங் கொண்ட 40 குடும்பங்களை விசேடமான அளவுகோல்களைப் பயன்படுத்தி குறித்த பிரதேச செயலாளரின் பரிந்தரைக்கமைய தெரிவு செய்து, அக்குடும்பங்களுக்கு 2,000/- ரூபாய் பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்யக் கூடிய வகையில் பயனாளிக் குடும்பங்களுக்கு டிஜிட்டல் அட்டையை வழங்கப்படவுள்ளது.

## 03. வலையமைப்பை நிறுவுதல்

கிராமிய மட்டத்திலான குடும்ப அலகுகளில் தொழில் முயற்சிகளுக்கு ஆர்வம் காட்டும் பெண்களை அடையாளங் கண்டு, தொழில் முனைவுகளுக்கான வழிகாட்டல் மற்றும் ஆரம்ப மூலதனத்தை வழங்குவதன் மூலம் 'ஒரு கிராமத்தில் ஒரு பெண் தொழில் முயற்சியாளரை' உருவாக்கும் நோக்கில், பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான சிறியளவிலான பல்பொருள் நிலையங்களின் வலையமைப்பை உருவாக்கும் வேலைத்திட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் 15,000 மில்லியன் ரூபாய்கள் நிதியொதுக்கிடப்பட்டுள்ளது.

குறித்த சிறியளவிலான பல்பொருள் நிலையங்கள் கணினித் தொகுதி மூலம் இணைப்புச் செய்யப்படுவதுடன், அவ்வியாபார நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் அரசாங்கத்ததால் பெற்றுக் கொடுக்கப்படும்.

## 05. பசுமை இலங்கை – 'ஒருவருக்கு – ஒரு மரக்கன்று' தேசிய வேலைத்திட்டம்

இலங்கையில் தற்போது காணப்படும் காடுகளைப் பாதுகாத்து 2025 ஆம் ஆண்டளவில் வன அடர்த்தியை 30 சத வீதம் வரை அதிகரிப்பதற்கும், நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாத்து ஊடுருவல் தாவரங்களை அகற்றி, சூழல் நேயம்மிக்க தாவரங்களின் பரம்பலை அதிகரிப்பதற்கும் பொருத்தமான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டு வரவு- செலவுத்திட்டத்தில் 2000 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பசுமை இலங்கை- 'ஒருவருக்கு ஒரு மரக்கன்று' தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு தேவையான நடவடிக்கைளை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

## 06. கம்பனியின் நடவழக்கைகளைப் பலப்படுத்தல்

2050 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையை காபனற்ற நாடாக மாற்றுவதற்கு அரசாங்கம் கொள்கைத் தீர்மானம் மேற்கொண்டுள்ளமையை, தேசிய ரீதியில் திட்டமிட்டுள்ள காபன் வெளியேற்றத்தைக் குறைக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பதற்காக சுற்றாடல் அமைச்சின் கீழ் இயங்குகின்ற இலங்கை காலநிலை மாற்றங்களுக்கான நிதியம் (தனியார்) கம்பனி உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கையைக் காபனற்ற நாடாக உருவாக்குவதற்குத் தேவையான உயர்ந்தபட்ச ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமான வகையில் அக்கம்பனியின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகளை சமகாலத்திற்கு தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் கட்டமைப்பு ரீதியாகப் பலப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 07. திட்டத்தைத் தயாரித்தல்

2050 ஆம் ஆண்டளவில் இலங்கை காபன் நிகரப் பூச்சிய நிலை கொண்ட நாடாக உருவாக்கும் இலக்கை அடைவதற்கான திட்டவரைபை, மூலோபாய திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, 05 வருடங்களுக்கு ஒருமுறை மீளாய்வு மேற்கொண்டு திருத்தியமைக்கப்படும் திட்டவரைபு மற்றும் ஐந்தாண்டு மூலோபாயத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும், விசேட நிபுணத்துவத்துவதுடன் கூடிய நிபுணர் குழுவொன்றை நியமிப்பதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 08. போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைத்தல்

இலங்கையில் தற்போது இயங்குநிலையிலுள்ள வாகனங்கள் 05 மில்லியன்களுக்கு அதிகமாகக் காணப்படுவதுடன், அது 2000 ஆம் ஆண்டில் மூன்று மடங்கு அதிகரிப்பைக் காட்டுகின்றது. மோட்டார் அல்லாத போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வளிமண்டலம் மாசடைவது குறைக்கப்படுவதுடன், உடல் ஆரோக்கியம், சுற்றடல், காலநிலை மாற்றங்கள் மற்றும் தனிநபர் நிதிநிலைமை போன்ற விடயங்களில் நேர்மய விளைவுகளை ஏற்படுத்தும். அதனால், பொருளாதார மற்றும் சுற்றாடல் ரீதியான நன்மைகளை அடைவதற்காக, மோட்டார் அல்லாத போக்குவரத்துக் கட்டமைப்புடன் ஒருங்கிணைப்பது பொருத்தமாக அமையுமென கண்டறியப்பட்டுள்ளது

- தற்போதுள்ள வீதிகளுக்குப் பொருத்தமான வகையில் சைக்கிள் பாதையை புள்ளடியிட்டு வேறாக்குதல், பாதசாரிகளுக்கான நடைபாதைகளை மேம்படுத்தல்
- அரச அலுவலகர்களுக்கு சைக்கிள் பாவனையை ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்,
- அலுவலகங்களில் சைக்கிள் பாவனையாளர்களுக்கு அவற்றைத் தரித்து வைப்பதற்கான இடங்களை ஏற்பாடு செய்தல்

## 09. POS பெறுகைக்கான விலைமனுக்கோரல்

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் நுகர்வோர் விற்பனை நிலையங்களுக்கான விற்பனை முனைய தொகுதிக்கான (POS) பெறுகைக்கு தேசிய போட்டி விலைமுறிக் கோரல் பொறிமுறையைப் பின்பற்றி விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்காக 05 விலைமனுக்கள் கிடைத்துள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த பெறுகைக்கான விலைமனுவை, ஈ-விஸ் சொலூசன்ஸ் பிரைவெட் லிமிட்டட் இற்கு வழங்குவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 10. முடிச்சு வகை சிகிச்சை முகக்கவசம்

89 மில்லியன் முடிச்சு வகை சிகிச்சை முகக்கவசங்களை விநியோகிப்பதற்காக சர்வதேச போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்தரைக்கமைய அடிப்படையாக விவரங்களுடன் கூடிய வகையில் பதிலளிக்கும் குறைந்த விலைமனுதாரரான சிசிலி புரெஜெக்ட்ஸ் கொன்சோட்டியம் கம்பனிக்கு குறித்த பெறுகையை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

---

கோவா

# கோவாவில் 78.94% வாக்கு பதிவு

40 தொகுதிகளைக் கொண்ட கோவா பேரவைக்கும், 70 தொகுதிகளைக் கொண்ட உத்தரகண்ட் பேரவைக்கும் நேற்று முன்தினம் (14) தேர்தல் நடைபெற்றது.

அந்தவகையில் கோவாவில் 78.94% வாக்குகள் பதிவாகியுள்ளன என கோவா தலைமை தேர்தல் அதிகாரி குணால் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், அதிகபட்சமாக சன்குலிம் தொகுதியில் 89.64% வாக்குகள் பதிவாகியுள்ளதோடு, தெற்கு கோவாவில் 78% வாக்குகளும் வடக்கு கோவாவில் அதிகபட்சமாக 79% வாக்குகளும் பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் 70 சட்டசபை தொகுதிகளைக் கொண்ட உத்தரகாண்ட் மாநிலத்தில் 65.1 சதவீத வாக்குகள் பதிவானது என அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



---

கிருஷ்ணகிரி

# மாட்டுச் சாணத்தால் சேகரிக்கப்பட்ட வாக்கு

தமிழகத்தில் இம்மாதம் 19ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், தேர்தல் களத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் பல்வேறு வகையான நூதன பிரசாரங்களில் ஈடுபட்டு வாக்காளர்களை கவர்ந்து வருகின்றனர்.

அந்தவகையில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் மாநகராட்சியில் 11ஆவது வட்டாரத்தில் போட்டியிடும் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ.தி.மு.க) வேட்பாளர் தனது வட்டாரத்தில் பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் (14) தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார்.



இதன்போது பொதுமக்களின் வீடுகளின் முன்பு கட்டப்பட்டிருந்த பசுமாடுகளின் சாணங்களை அவரே கூடையில் அள்ளிக் கொட்டி அப்பகுதியை சுத்தம் செய்துள்ளார்.

இந்நிலையில் சாணங்களை அள்ளி வித்தியாசமான முறையில் அ.தி.மு.க வேட்பாளர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டமை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

மேலும், இதுகுறித்த புகைப்படங்களும் இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

ஆக்ரா

காதலர் தினத்தன்று

# காதல் ஜோடிகளைத் தாக்கிய அரசியல் கட்சி

காதலர் தினம் உலகம் முழுவதும் நேற்று முன்தினம் (14) கொண்டாடப்பட்டது. இந்நிலையில், காதலர் தினத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆக்ராவில் நேற்று முன்தினம் பஜ்ரங் தள கட்சியின் உறுப்பினர்கள் சிலர் பூங்கா, உணவகங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் கண்ணில் பட்ட காதல் ஜோடிகளையெல்லாம் துன்புறுத்தி விரட்டியடித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது குறித்த வீடியோக்களும் இணையத்தில் வெளியாகி மக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்நிலையில் இதுகுறித்து பஜ்ரங் தளத்தின் பொறுப்பாளர் அவதார் சிங் கில் கூறுகையில், காதலர் தினம் கொண்டாட்டம் என்பது இந்தியாவில் பரவும் மேற்கத்திய கலாசாரம். அது இங்கு வளர அனுமதிக்க முடியாது. இந்துத்துவாவைக் காப்பாற்ற காதலர் தினத்தன்று மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் பொது இடங்களில் பார்க்கும் இளம் ஜோடிகளை கேள்விக் கேட்க வேண்டும் என்று கூறினார்.

இவரது கருத்துகள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் காதல் ஜோடிகளை துன்புறுத்திய பஜ்ரங் தள உறுப்பினர்கள் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

பரமக்குடி

# வைரலாகும் 90'S கிட்ஸ் திருமணப் பதாகை

தமிழகத்தில் இம்மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களைக் கவரும் விதமாக வேட்பாளர்கள் வினோதமாகப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், அரசியல்வாதிகளே வாயைப் பிளக்கும் வகையில் 'உள்ளாட்சியோ, ஊராட்சியோ இங்க இல்லை; எங்கேயும் எங்க ஆட்சிதான்' என்ற வாசகத்துடன் பரமக்குடியில் இளைஞர்கள் சிலர், தமது நண்பரின் திருமணத்துக்காக வைத்த திருமணப் பதாகையொன்று இணையத்தில் வைரலாகி வருகிறது.

குறித்த பதாகையில், அமெரிக்க ஜனாதிபதி, ஜேர்மனி ஜனாதிபதி, பிரித்தானியப் பிரதமர், கனடாப் பிரதமர் ஆகியோரின் புகைப்படங்கள் பொறிக்கப்பட்டுள்ளதுடன் அதில், 'எங்களின் அன்பான அழைப்பை ஏற்று, மணமக்களுக்கு வாழ்த்துக் கூறிய உலகத் தலைவர்களுக்கு நன்றி' எனத் குறிப்பிடப்பட்டுள்ளது.




---

கேரளா

# 2 கோடி ரூபாய் செலவில் மீட்கப்பட்ட இளைஞன்

கேரளாவில் மலையேறிய போது பாறை இடுக்கில் சிக்கிக் கொண்ட வாலிபரை மீட்கும் பணிக்கு அம் மாநில அரசு சுமார் 75 இலட்சம் ரூபாய் (இலங்கை மதிப்பில் 2 கோடி ரூபாய் ) செலவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளாவின் பாலக்காட்டை அடுத்த செரடு பகுதியை சேர்ந்தவர் 23 வயதான பாபு. மலை ஏறுவதில் ஆர்வம் கொண்டவர். இவர் கடந்த 7ஆம் திகதி மாலை தனது நண்பர்களுடன் மலம்புழா பகுதியில் உள்ள மலைக்குச் சென்ற போது அங்கு கால் தவறி கீழே விழுந்து செங்குத்தான பாறை ஒன்றின் இடையே சிக்கி கொண்டார்.



இதனையடுத்து அவரது நண்பர்கள் அவரை மீட்க முயற்சி செய்த போதும் அவர்களால் முடியாமல் போனதால் இது குறித்து மலம்புழை வனத்துறையினரிடம் அவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து ஹெலிகொப்டரின் மூலம் அங்கு சென்ற கடலோர பாதுகாப்பு படை, விமானப்படை, இராணுவத்தின் மீட்பு குழுவினர் குறித்த இளைஞனை சுமார் 45 மணி நேர போராட்டத்திற்குப் பின்னர் பத்திரமாக மீண்டனர்.

இந்நிலையில் பாபுவை மீட்கும் பணிக்கு டிரோன்கள், ஹெலிகொப்டர் பயன்படுத்தியமை உள்ளிட்ட காரணங்களுக்காக கேரள அரசு சுமார் 75 இலட்சம் ரூபாய் செலவு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

ஒடிசா


14 திருமணம் செய்த கல்யாண ராமன்

# காதலர் தினத்தில் கைது

வைத்தியர் ஒருவர் 14 பெண்களைத் திருமணம் செய்து அவர்களை ஏமாற்றிய சம்பவம் அதிர்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒடிசா மாநிலம், பட்குரா பகுதியை சேர்ந்தவர் 54 வயதான ரமேஷ் சந்திர ஸ்வெய்ன். ஹோமியோபதி வைத்தியரான இவர், 1979ஆம் ஆண்டு முதலாவது திருமணம் செய்து கொண்ட நிலையில் 1982ஆம் ஆண்டு இரண்டாவது திருமணம் செய்து கொண்டுள்ளதாகவும், ஒடிசாவை சேர்ந்த இவ் இரு மனைவிகள் மூலம் அவருக்கு 5 பிள்ளைகள் உள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

அதன்பின்னர், வேலை விஷயமாக வெளியூர் செல்வதாகக் கூறிக்கொண்டு, புதுடெல்லி, மராட்டியம், மேற்குவங்காளம், ஆந்திரா, ஜார்கண்ட், ஒடிசா ஆகிய ஏழு மாநிலங்களைச் சேர்ந்த, விவகாரத்து பெற்ற அல்லது தனியாக வாழ்ந்து வரும் 12 பெண்களை, வைத்தியர் என்ற மதிப்பையும் போலி அடையாள அட்டை, ஆவணங்கள், ஆதார் உள்ளிட்டவற்றை பயன்படுத்தியும் அவர்களை ஏமாற்றித் திருமணம் செய்துள்ளதாகவும் அதன் பின்னர் அவர்களது நகை, பணத்தை எடுத்துக்கொண்டு வேறு மாநிலத்திற்கு செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.



இந்நிலையில் கடந்த ஜூலை மாதம் ரமேஷ் குறித்து பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் பொலிஸ் நிலையத்தில் புகார் தெரிவித்தமையை அடுத்து நீண்ட நாள் தேடுதல் வேட்டையின் பின்னர், காதலர் தினமான நேற்று முன்தினம் (14) ரமேஷை பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டி

# தொடரை இழந்த இலங்கை

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை இழந்துள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் ஏற்கெனவே தோற்றிருந்த இலங்கை, கன்பெராவில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் தோற்றமையைத் தொடர்ந்தே தொடரை இழந்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஆரோன் பின்ஞ், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 121 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், அணித்தலைவர் தசுன் ஷானக ஆட்டமிழக்காமல் 39 (38), தினேஷ் சந்திமால் 25 (29), பதும் நிஸங்க 16 (21) ஓட்டங்களைப் பெற்றனர்.




பந்துவீச்சில், கேன் றிச்சர்ட்ஸன் 4-0-21-3, அஸ்தன் அகர் 4-0-14-1, கிளென் மக்ஸ்வெல் 1-0-3-1, ஜொஷ் ஹேசில்வூட் 4-0-31-1, டேனியல் சாம்ஸ் 3-0-18-0, மிற்செல் ஸ்டார்க் 4-0-30-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 122 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, கிளென் மக்ஸ்வெல்லின் 39 (26), ஆரோன் பின்ஞ்சின் 35 (36), ஜொஷ் இங்லிஸ்ஸின் ஆட்டமிழக்காத 21 (18), அஸ்தன் அகரின் 13 (13) மார்க்கஸ் ஸ்டொய்னிஸின் ஆட்டமிழக்காத 12 (08) ஓட்டங்களோடு 16.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், மகேஷ் தீக்ஷன 4-0-24-3, ஜெஃப்ரி வன்டர்சே 4-0-32-1, துஷ்மந்த சமீர 4-0-22-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக கேன் றிச்சர்ட்ஸன் தெரிவானார்.

மருதமுனை எவரெடி விளையாட்டுக் கழகத்தின்

# வீரர்கள் கௌரவிப்பு

ஏ.எல்.எம். ஷினாஸ், றாசிக் நபாயிஸ்

மருதமுனை எவரெடி விளையாட்டுக் கழகத்தின் ஐந்தாவது வருடாந்த பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும், வீரர்கள் கௌரவிப்பும் கழகத்தின் பொதுச் செயலாளர் அல்-ஹாஜ் ஏ. கமால்தீன் ஒருங்கிணைப்பில் கழகத்தின் தலைவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உதவி ஆணையாளருமான எம்.ஐ.எம். உவைஸ் தலைமையில் மருதமுனை எம்.சி ரெஸ்டில் அண்மையில் நடைபெற்றது.

மூன்று கட்டங்களாக நினைவு கூறப்பட்ட இந்நிகழ்வில் கழகத்தின் ஸ்தாபகர் எம்.எம். சஹாப்தீன், முதல் வீரர் ஏ.பி. இம்தியாஸ் மற்றும் கழகத்தின் முதலாவது தலைவர் ஏ.ஆர். சமியூன், தென்கிழக்கு, சப்ரகமுவ




பல்கலைக்கழகத்திற்கு தெரிவான கழகத்தின் வீரர்கள் இருவர், கழக நிர்வாகிகள், போஷகர்கள், ஆலோசகர்கள், கனிஷ்ட, சிரேஷ்ட வீரர்கள் என பலர் நினைவுச் சின்னம், பதக்கம், சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இந்நிகழ்வுக்கு சிறப்பதிதியாகக் கலந்து கொண்ட கழகத்தின் தவிசாளரும், கல்முனை மாநகர சபையின் உறுப்பினருமான ஏ.ஆர். அமீர் சிறப்புரை நிகழ்த்தினார், கழகத்தின் பயிற்றுவிப்பாளரும் ஆசிரியருமான எஸ். அஸீம் விசேட உரையை நிகழ்த்தினார்.

கலை, கலாசார நிகழ்வுகளுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் புதிய நிர்வாகத் தெரிவு இட ம்பெற்றதுடன் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இதில் கழகத்தின் போஷகர்கள், ஆலோசகர்கள், ஆதரவாளர்கள், அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகிகள், வீரர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

சாய்ந்தமருது கிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்தை

# வென்ற நற்பிட்டிமுனை கிரிக்கெட் கழகம்

அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தையொட்டி நற்பிட்டிமுனை கிரிக்கெட் கழகம், நற்பிட்டிமுனை பொது மைதானத்தில் ஒழுங்கு செய்திருந்த 18 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியில் 19 ஓட்டங்களால் சாய்ந்தமருது- கிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்தை நற்பிட்டிமுனை கிரிக்கெட் கழகம் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நற்பிட்டிமுனை கிரிக்கட் கழகம், முதலில் துடுப்பெடுத்தாடி 18 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 145 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு



துடுப்பெடுத்தாடிய கிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் 18 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுத் தோல்வியடைந்தது.

இந்நிகழ்வில், ஓய்வு பெற்ற அதிபர் அல்ஹாஜ் எம்.எல்.ஏ. கையும் பிரதம அதிதியாகவும், மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எச்.எச்.எம். நபார் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டித் தொடர் இன்று ஆரம்பிக்கிறது:

# இந்தியாவுக்கு சவால் அளிக்குமா மே. தீவுகள்?

இந்திய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரானது, கொல்கத்தாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளை இந்தியா வெள்ளையடித்த நிலையில், இத்தொடரில் இந்தியாவுக்கு சவால் அளிப்பதற்கு மிகவும் மேம்பட்ட துடுப்பாட்டப் பெறுபேறுகளை மேற்கிந்தியத் தீவுகள் வழங்க வேண்டியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளின்



பந்துவீச்சைப் பொறுத்த வரையில் குறை சொல்வதற்கு இல்லை என்ற நிலையில், அணித்தலைவர் கெரான் பொலார்ட், உப அணித்தலைவர் நிக்கலஸ் பூரான், ஷே ஹோப், பிரண்டன் கிங் உள்ளிட்டோர் சிறப்பான இனிங்ஸ்களை ஆட வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகள் எதிர்வுகூற முடியாமல் இருக்கின்ற நிலையில் மேற்கிந்தியத் தீவுகளை இந்தியா சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

இதேவேளை, இவ்வாண்டும் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் அதற்கு அணியை இந்தியாவும் தயார் செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அந்தவகையில், ரவி பிஷ்னோய், வெங்கடேஷ் ஐயர் என்போருக்கு தம்மை நிரூபிக்க வாய்ப்புள்ள தொடராக இத்தொடர் காணப்படுகின்றது.

கனடா

கனடாவில் 50 ஆண்டுகளுக்கு பின்னர்

# அவசர நிலை பிரகடனம்

கனடாவில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைத் தடுக்கும் விதமாக அந்நாட்டு அரசு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றது.

குறிப்பாக, பொது இடங்களில் நடமாடுவோர், பொது போக்குவரத்தில் பயணிப்போருக்கு தடுப்பூசி சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டு உள்ளதோடு, கனரக வாகன சாரதிகள் கட்டாயம் தடுப்பூசி செலுத்த வேண்டுமெனவும் அவ்வாறு தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் ஒரு வாரம் தனிமைப்படுத்தப்படுவார்கள் எனவும் கனடா அரசு



உத்தரவிட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கனரக வாகன சாரதிகள், தலைநகர் ஒட்டாவாவின் முக்கிய வீதிகளில் அண்மைகாலமாக கனரக வாகனங்களை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், போராட்டத்தை ஒடுக்கும் விதமாக 50 ஆண்டுக்கு பின்னர், நாடு முழுவதும் அவசரநிலை சட்டத்தை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டு அவர்களின் கனரக வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் போராட்டக்காரர்களால் முடக்கிவைக்கப்பட்டுள்ள பாலங்களை உடனடியாக திறக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

போராட்டம் ஒன்றுக்காக கனடாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளமை இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# 'பூஸ்டர்' குறித்து திடுக்கிடும் தகவல்

உலகை அச்சுறுத்திவரும் கொரோனாத் தொற்றானது உருமாற்றம் அடைந்து வருவதால், மூன்றாம் கட்டத் தடுப்பூசியான பூஸ்டரை பல்வேறு நாடுகள் தங்களது குடிமக்களுக்கு செலுத்தி வருகின்றன.

இந்நிலையில் பூஸ்டர் தடுப்பூசியின் செயற்றிறன் குறித்து அண்மையில் அமெரிக்காவில் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் இணைந்து ஆய்வொன்றினை நடத்தியுள்ளன.

குறித்த ஆய்வில் மூன்றாவது தடுப்பூசி செலுத்தி இரண்டு மாதங்களின் பின்னர், தடுப்பூசியின் செயற்றிறன் 87 சதவீதமாக இருந்ததாகவும், ஆனால், 4ஆவது மாதத்தில் அதன் செயற்றிறன் 66 சதவீதமாக குறைந்துள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.





அவுஸ்திரேலியா

# பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு நற்செய்தி

பார்வைக் குறைபாடு உள்ளவர்கள் பார்க்கும் வகையிலான கருவியை அவுஸ்திரேலிய ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சிட்னி பல்கலைக்கழகத்தையும் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தையும் சேர்ந்த ஆய்வாளர்கள், கண் குறைபாடுகள் கொண்டவர்களுக்கு பார்க்க உதவும் 'Phonenix 99' என அழைக்கப்படும்



கருவியை கண்டுபிடித்துள்ளனர். இக்கருவியானது கண்ணில் உள்ள விழித்திரையின் பின்பக்கத்தில் பொருத்தப்படும்.

தற்போது இக்கருவியை ஆடுகளின் கண்களில் பொருத்தி கண்காணிக்கப்படுகிறது. ஆடுகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரியவந்தால், மனிதர்களுக்கு பொருத்தும் முயற்சியில் ஈடுபடவுள்ளதாகவும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

ரஷ்யா

# ரஷ்யாவை எச்சரிக்கும் ஜி 7 நாடுகள்

ரஷியாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே பல ஆண்டுகளாக எல்லைப்பிரச்சினை காணப்பட்டு வருகின்றது.

குறிப்பாக உக்ரைனின் கிரிமியா தீபகற்பத்தை கடந்த 2014ஆம் ஆண்டு ரஷ்யா கைப்பற்றியதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையான மோதல் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் அண்மைக்காலமாக உக்ரைன் எல்லையில் ரஷ்யா தனது படைகளை குவித்து வருவதால், உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கலாம் என்ற அச்சம் நிலவி வருகிறது.

அத்துடன் பெலாரஸ், கிரிமியா, மேற்கு ரஷ்யாவில், ரஷ்ய படைகள் குவிக்கப்பட்டுள்ளமை குறித்த செயற்கைக்கோள் படங்களும் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இதனையடுத்து உக்ரைனின் மீது ரஷ்யா




படையெடுப்பு நடத்தினால் ரஷ்யா மீது கடுமையான பொருளாதார தடை விதிக்கப்படும் என ஜி-7 நாடுகள் எச்சரித்துள்ளன.

இது குறித்து ஜி- 7 நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பானை ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ஜி- 7 நாடுகள் இணைந்து தடை விதிப்பதன் மூலம், ரஷ்யாவின் பொருளாதாரம் நிலைகுலைந்து போகும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், உக்ரைனின்



இறையாண்மை, எல்லைப் பாதுகாப்பு, பொருளாதாரம் உள்ளிட்டவற்றை காக்க சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட உறுதி பூண்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, பேச்சுவார்த்தை மூலம் சுமூக தீர்வு காணாமல், உக்ரைன் மீது போர் தொடுத்தால், ரஷ்யா கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்து

# விலங்குகள் மீதான சோதனைக்குத் தடை?

சுவிட்சர்லாந்தில் புதிய மருந்து தயாரிக்க விலங்குகளைப் பயன்படுத்துவதற்குத் தடை விதித்ததற்கு மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

மருத்துவர்கள் நோய்களுக்கான மருந்துகளைக் கண்டுபிடிக்கும் போது முயல், எலி போன்ற சிறு விலங்குகளைப் பயன்படுத்தி சோதனை நடத்துவர்.

அந்தவகையில் 2020 ஆம் ஆண்டில் மட்டும் சுவிட்சர்லாந்து மருத்துவ ஆய்வாளர்கள் நடத்திய பரிசோதனைகாக 556,000 மேற்பட்ட விலங்குகள் பயன்படுத்தப்பட்டதாக அரசு துறையில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.



அதுமாத்திரமின்றி, 2015 ஆம் ஆண்டை விட மருத்துவ ஆராய்ச்சிக்கு விலங்குகளை பயன்படுத்துவது 18 % உயர்ந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. மேலும், 2020ஆம் ஆண்டு 60% க்கும் அதிகமானவை அடிப்படை உயிரியல் ஆராய்ச்சியின் போது முன்னெடுக்கப்பட்டன. இதனை தொடர்ந்து விலங்குகளை வைத்து சோதனை செய்வதற்கு தடை விதிக்க வேண்டுமென சமூக ஆர்வலர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. இது குறித்து இடம்பெற்ற வாக்கெடுப்பில் தடை விதிப்பதற்கு ஆதரவாக 20.09% வாக்குகளும் தடை எதும் தேவை இல்லை என 79.1% மக்களும் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே புதிய மருந்துகளை தயாரிப்பதற்கு விலங்குகள் மீதான ஆராய்ச்சி தேவை என்று மருந்து தயாரிப்பு தொழில் துறை தெரிவித்துள்ளது. இதற்கு தடை செய்ய வேண்டும் என்று சொல்வோர்க்கு மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் புதன்கிழமை, 16 பெப்ரவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.